பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

Re-boring Re-grinding
Line Boring etc...

Done within 24 hrs
for all makes of vehicles

GENUINE JAPANESE PISTON LINER KIT SETS AND ENGINE BEARING FOR ALL JAPANESE DIESEL AND PETROL VEHICLES

EDIRISINGHE BROTHERS LTD.
'Auto Court'
567, Prince of Wales Avenue,
Colombo - 14
Tel: 431808, 434012

# உதயன்

விலை ரூபா 3-50

றீ போறிங், றீ -
கிரைண்டிங் மற்றும்
லைன் - போறிங்,
போன்றவற்றிற்கு

எந்த வகையான வாகனங்களாயினும்
24 மணி நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தரமான ஜப்பான் பிஸ்டன், லைனர் கிற் செட்கள், எல்லாவிதமான ஜப்பான் டீசல், பெற்றோல் வாகனங்களுக்குரிய எஞ்சின் பெயாரிங்களும் உண்டு.

எதிரிசிங்க பிரதர்ஸ் லிமிட்டெட,
''ஓட்டோ கோட்''
567, பிரின்ஸ் ஒப்வேல்ஸ் எவுனியு,
கொழும்பு - 14.
தொலைபேசி - 431808, 434012.

சுடர் 5: பிரமோதூத ஞூ வைகாசி மீ 13 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 2 (27-05-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 96

# ஆறாவது திருத்த நீக்கம் குறித்து எதிரணியுடன் செவ்வாய் ஆராய்வு

## ஆதரவு திரட்டுவதில் ஈரோஸ் மும்முரம்

கொழும்பு, மே. 27

அரசமைப்புக்கான ஆறாவது திருத்தத்தை நீக்குவது சம்பந்தமாக ஈழவர் ஜனநாயக முன்னணி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் பூர்வாங்கச் (மாதிரிச்) சட்டவரைவைத் தயாரித்து வரும் சட்டத்துறை நிபுணர் ஒருவர் —

பல எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளை நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை (29 ஆம் திகதி) சந்திக்கிறார்.

இந்தச் சட்ட நிபுணர் ஒரு தமிழராவார்.

*அவர் ஐக்கிய சோஷலிச முன்னணியைச் சேர்ந்த திரு அத்தாவுட செனிவிரத்தினா, நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. வாசுதேவ நாணயக்காரா, மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. தினேஷ் குணவர்த்தனா, முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஜனாப் எம். எச். எம் அஷ்ரப் ஆகியோரைச் செவ்வாய்க்கிழமை சந்தித்து தாம் தயாரித்து முடித்துள்ள பூர்வாங்கச் சட்டவரைவில் என்னென்ன மாற்றங்களைச் செய்யவேண்டும் என்பது குறித்து கட்சிப் பிரதிநிதிகளின் கருத்தை அறிவார்*

பிரஸ்தாப சட்டத்துறை நிபுணர் ஈரோஸின் அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணியின் சார்பில் அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவது சம்பந்தமான ஒரு மாதிரிச் சட்ட வரைவை ஆக்கியுள்ளார்.

அந்தச் சட்டவரைவு, தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், எதிர்க்கட்சியில் உள்ள பிரதிநிதிகளின் கருத்தை அறிந்து அவற்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### எஞ்சிய 6 பேரும் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 27

பலாலி இராணுவ முகாமில் உள்ள நான்கு சிங்களப் பொலீஸாரும் அடுத்த மாதம் முதலாம் திகதியுடன் தென் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்த 2 சிங்களப் பொலீஸாருக்கும் இடமாற்ற உத்தரவுகள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் வடபகுதியில் சிங்களப் பொலீஸார் அனைவரும் இடமாற்றம் பெற்ற போது இந்த 6 சிங்களப் பொலீஸார் மாத்திரம் எஞ்சி இருந்தனர் என்பது குறிப்பிடதக்கது. (இ-10)

### கோட்டைக்குள் அமெரிக்க அதிகாரிகள்

யாழ்ப்பாணம் மே 29

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் யாழ். கோட்டைக்குள் சென்று பொலீஸ் அத்தியட்சகரைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

கோட்டைக்குள்ளும், பல பகுதிகளையும் அவர்கள் சுற்றிப் பார்வையிட்டனர். (இ-10)

### தேயிலை சாப்பிட்டு மரணம்

யாழ்ப்பாணம், மே 27

தேயிலை சாப்பிட்ட 9மாத குழந்தை மூச்சடைப்பு ஏற்பட்டு மரணமடைந்தது.

நேற்றுக் காலை கொழும்புத்துறையில் இச் சம்பவம் நடந்தது.

இறந்த குழந்தை பபாசங்கர் சிவலிங்கம் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-9)

### விபத்து

குருநகர், மே 27

யாழ். காங்கேசன்துறைவீதி மனோகராச் சந்தியில் நேற்று சனி காலை லொறி - வான் விபத்து ஒன்று இடம்பெற்றது. (இ-51)

### ஹமீத் நாளை வடக்கே!

யாழ்ப்பாணம், மே 27

விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வடக்கு- கிழக்கு சமாதானக்குழுவின் தலைவரும் நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் நாளை வடக்கே வருவார்.

இம்முறை பேச்சுக்களின் போது முப்படைகளின் உயரதிகாரிகளும் உடனிருப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-9)

### ஆசிரியர் இடமாற்ற அதிகாரம்

கொழும்பு, மே 27

ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கான அதிகாரம் சில நிபந்தனைகளுடன் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி பிறப்பித்துள்ளார்.

இத்தகவலை தேசிய அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுத்தலைவர் ஜோர்ஜ் மென்டிஸ் தெரிவித்தார்.

பயிற்சி ஆசிரியர், கஷ்டமான பிரதேச பாடசாலைகளில் நியமனம் பெற்றவர்கள் ஆகியோரை இடமாற்றம் செய்ய மாகாண சபைகளுக்கு அதிகாரம் கிடையாது என்றும் திரு. மென்டிஸ் சொன்னார். (இ-எ)

## 108 பேர் விடுதலை!

தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 108 பேர் நேற்று மாலை நான்கு மணியளவில் யாழ். பெருமாள் கோவில் முன்றலில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சியின் போது கைதிகளின் உறவினர்கள்உட்பட பெரும் எண்ணிக்கையானோர் அங்குகூடி இருந்தனர்.

விடுதலைப் புலிகளின் வலிகாமம்பிரிவு அரசியல்பொறுப்பாளர் ஆஞ்சநேயர் கைதிகளை விடுவித்து உரை நிகழ்த்தினார்.

அந்நிய இராணுவத்தாலும் தேசத் துரோகிகளாலும் சீரழிக்கப்பட்டு, போராட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் இப்போது பூரண மனிதர்களாக விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று ஆஞ்சநேயர் கூறினார். விடுவிக்கப்பட்டவர்களின் எதிர்காலம் பெற்றோர்களின் கையிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

யாழ். பிரதேச பொறுப்பாளர் பொன் மாஸ்டர் வைபவத்துக்கு தலைமை வகித்தார். (இ-9)

## உரம் விற்பனை நிறுத்தம்

உரம் விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ் - கமநல சேவை நிலையங்களில் உரம் விற்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

விவசாய ஆராய்ச்சி அமைச்சு உரவிலைக் குறைப்பை அறிவித்துள்ள போதிலும் கமநல சேவை நிலையங்களுக்கு உற்பத்தி பூர்வ அறிவித்தல் ஏதும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே உரம் விற்பனை செய்யப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாக கமநல சேவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கமநல சேவை நிலையத்தில் போதியளவு உர வகைகளும், மருந்துவகைகளும் கையிருப்பில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## கோட்டையில் முடங்கிக் கிடந்த தொண்டர்படை திருமலைக்கு

யாழ்ப்பாணம், மே. 27

யாழ். கோட்டையில் இருந்த 35 குடிமக்கள் தொண்டர் படையினரில் ஐவரைத் தவிர எஞ்சியோர் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டுவிட்டனர் என்று தெரிகிறது.

வடக்கு - கிழக்கில் ஈ. பி ஆர். எல். எவ். இருந்த சமயம் இந்திய அமைதி காக்கும் படையினரின் உதவியுடன் இந்த குடிமக்கள் தொண்டர் படையினர் உருவாக்கப்பட்டிருந்தனர்.

இந்தியப் படை வாபஸ் பெற்ற சமயம் குடிமக்கள் தொண்டர் படையினரில் பெரும்பாலானோர் ஈ. பி. ஆர். எல். எவ்புடன் சேர்ந்து வெளியேறி இருந்தனர். சிலர் தாமாகவே விலகிச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களைத் தவிர, 35 பேர் வரை கோட்டைக்குள்ளேயே தங்கி இருந்தனர்.

இவர்களிலேயே 30 பேர் தமது சொந்த விருப்பத்தின் பேரில் தற்போது திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

## எமது பிரேரணை தோற்றால் ஈழப் போராட்டம் தொடரும்

### பாலகுமாரன் சொல்கிறார்

யாழ்ப்பாணம், மே 27

விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதை பெரிதுபடுத்தி, அதனைச் சாட்டாக வைத்து, ஆறாவது திருத்தத்தை நீக்க உடன்பட முடியாது என்று எதிர்க்கட்சிகளில் சில கூறுவது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல.

ஈரோஸ் இயக்கத்தின் முக்கிய பிரமுகர் திரு. வேலுப்பிள்ளை பாலகுமார் உதயனுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

1957 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தமும், 1965 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தமும் கிழித்தெறியப் பட்டன.

அந்த ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்ட போது தமிழ் மக்களிடம் ஆயுதங்கள் இருந்தனவா? இல்லாத போதும் அவை கிழித்தெறியப்பட்டனவே?!

அதற்குக் காரணமாக இருந்தவர்களும் அன்றைய அரசியல் எதிர்க்கட்சிகள் தான்.

இந்த நிலை சிங்கள இனவாதத்தின் அரசியல் நிலையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதை அப்போது எடுத்துக்காட்டியது. இன்றும் அந்த இனவாதம் தொடர்ந்து கொண்டிருப்பதாகவே நாம் கருதுகிறோம்;உணர்கிறோம்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## இருபாலையிலும், கிளிநொச்சியிலும் அனாதைக் குழந்தைகளுக்கு பராமரிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம் மே 27

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுக் கழகம் சுமார் 300 அனாதைக் குழந்தைகளுக்கு பராமரிப்பு இல்லங்களை நிறுவும்.

அடுத்த இரண்டு வார காலத்தில் இருபாலையிலும், கிளிநொச்சியிலும் இந்த நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்.

கடந்த கால அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைக் கொண்டே இந்த பராமரிப்பு இல்லங்கள் அமைக்கப்பட உள்ளன.

## புலிகள் மகளிர் முன்னணியின் மாநாடு இன்று யாழ் நகரில்

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் யாப்பு அமைப்பதற்கான மாநாடு இன்று முதல் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணம் வின்ஸர் திரையரங்கில் நடைபெறும்.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா (மாத்தயா), செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மகளிர் பிரிவு உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றுவர் என எதிர்

(7 ஆம் பக்கம் பார்க்க)

### காஷ்மீருக்கு புதிய ஆளுநர்

காஷ்மீரின் புதியஆளுநராக திரு. கிரிஷ்சந்திரா சக்ஸேனா நேற்று நியமிக்கப்பட்டார்.

இதுவரை காலமும்ஆளுநராக பதவி வகித்த திரு. ஜக்மோஹன்சிங் நேற்று தனது ராஜினாமாவை சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி அதனை ஏற்றுக் கொண்டார். (இ-எ)

## மலையக மக்கள் முன்னணியுடன் ரஞ்சன் நாளை கொழும்பில் பேச்சு

### சந்திரசேகரன் பங்குபற்றுவார்

கொழும்பு, மே. 27

ஒரு லட்சம் இந்தியப் பிரசைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சரும் பாதுகாப்பு துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன மலையக மக்கள் முன்னணியை அழைத்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொழும்பில் பேச்சுவார்த்தை நடைபெறும்.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன், செயலாளர் நாயகம் ஜனாப் காதர் ஆகியோர் மலையக மக்கள் முன்னணி சார்பாக இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு லட்சம் இந்தியப் பிரசைகளைபலாத்காரமாகஇந்தியாவுக்கு அனுப்பும் திரு. ரஞ்சன் விஜேரத்னாவின் முடிவை தெரிந்து திரு. சந்திரசேகரன் மலையகம் எங்கும் தீவிர பிரசாரம் மேற்கொண்டிருந்த சமயம் கடந்த 15 ஆம் திகதி தலவாக்கலையில் வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்டதும் —

இவர் கைது செய்யப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

27 - 5 - 90

ஞாயிற்றுக்கிழமை வைகாசி 13

சுபநேரம்:
08.52 - 10. 22

இராகுகாலம்
04.22 - 05.52

## வடக்கு-கிழக்கு ஹர்த்தால்; விடுதலைப் புலிகளுக்கு நன்றி சந்திரசேகரன் தெரிவிப்பு

நுவரெலியா, மே 27

மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும், இம் மக்களின் எதிர்காலப் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு- கிழக்கு முழுவதும் ஏற்பாடு செய்திருந்த ஹர்த்தால் எங்களுக்கெல்லாம் புத்துணர்வை ஏற்படுத்தி இருக்கிறது. மற்றும் எமது விடுதலைக்காக இந்த ஹர்த்தாலைப் பயன்படுத்தியதற்காகவும் எமது நன்றிகள்.

கடந்த திங்கட்கிழமை வடக்கு- கிழக்கில் நடத்தப்பட்ட ஹர்த்தால் தொடர்பாக விடுத்த அறிக்கையில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மலையக மக்களுக்காக

(10-ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



பேச்சு பேச்சென்டு உவர் ரஞ்சனார் எல்லாரோடும் பெரும் பேச்சு நடத்துகிறார் போலை ......!

## செய்திச் சாரம்

### ஆகஸ்டில் 500 தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம், மே 27

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் யாழ் நகரில் 500 தொலைபேசி இணைப்புகளைக் கொண்ட தொலைபேசிச் சேவை பொருத்தப்பட்டுவிடும்.

— இவ்வாறு தொலைத்தொடர்பு திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐநூறு தொலைபேசி இணைப்புகளை ஏற்படுத்துவதற்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள் எற்கனவே கொழும்புக்கு வந்து சேர்ந்துவிட்டன. அவற்றை யாழ்ப்பாணம் எடுத்துவர முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. (உ-9)

### புலிகள் இயக்கம் பங்குபற்றாதாம்

யாழ்ப்பாணம், மே 27

சர்வகட்சி மாநாட்டில் விடுதலைப்புலிகள் இயக்சம் பங்குபற்றாது.

விடுதலைப் புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் இதனை நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

'சர்வகட்சி மாநாட்டில் பார்வையாளர்களாசப் பங்குபற்றினோம். அதிலிருந்து எம்மை வாபஸ் பெற்றுக் கொண்டும்விட்டோம்' - இப்படி அவர் மேலும் சொன்னார். (உ-9)

### பொலீஸ் நிலையத்தில் கூடிய புலிகள்

திருகோணமலையில் உள்ள ஜமாலியா பொலீஸ் நிலையத்தில் வெள்ளிக்கிழமை இரவு பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகள் திரண்டனர்.

உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் நடந்து கொண்ட விதம் சம்பந்தமாக விசாரிப்பதற்காகவேஅவர்கள் அங்கு சென்றிருந்ததாக பின்னர் தெரியவந்தது.

சம்பந்தப்பட்ட உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கு அப்போது இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இது விடயத்தை சுமுகமாக தீர்க்கப் பொலீஸார் முயன்று வருவதாக நேற்றுக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (அ-155)

### இரண்டு சிப்பாய்களைக் காணவில்லை

கொழும்பு, மே 27

விடுமுறையின் பின் முகாம் திரும்பிய இரு இராணுவச்சிப்பாய்கள் அம்பாறையில் காணாமல் போய்விட்டதாகக் கூறப்படுகிறது. இவ்விருவரும் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் எனசொல்லப்படுகிறது.

இதே வேளை இன்னொரு இராணுவ வீரர் பல நாட்கள் பிடித்து வைத்திருக்கப்பட்டு பின்னர் தப்பி வந்ததாகவும் கொழும்புக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இராணுவப்பாதுகாப்புடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த [Crimson Globe] பீட்றூட் விதை, விவசாய ஆய்வுகூட அனுமதி பெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது விற்பனைக்கு உண்டு பிள்ளையார், 259' காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3490)

புதிய Unitra Recorder, Amplifier, Speaker ஆகியனவும் புதிய Camaraக்களும் விற்பனைக்குண்டு. அத்துடன் பழைய England ரலி சைக்கிளும் (Size 26'') விற்பனைக்குண்டு. தொடர்பு: K. பிரதீபன் No. 7, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (3711)

நல்லஇனஅல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி K S.R. போட்டோ இல: 12A, கந்தப்புராண வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் சந்திக்கும் நேரம் மாலை 4-6 மணிவரை. (13156)

உன்னத நிலையில் ஒரே உரிமையாளரின் பாவனையில் உள்ள C.V. 1000 தொடர் இலக்க A. 40 வான் விற்பனைக்கு அல்லது காருடன் மாற்றத்திற்கு உண்டு. தொடர்பு 29/53, கோவில் வீதி, யாழ்ப்பாணம். [3713]

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள CB 125T மோட்டார் சைக்கிள் (Alloy Wheel), நிறம் Cherry Red, உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு 83A. பிரதான வீதி, யாழ்ப்பாணம், (சென் ஜேம்ஸ் ஆலயம் முன்பாக) (3718)

## தவறி விட்டது

N. S. வரதராஜா என்பவரின் கடவுச்சீட்டு (Pass Por கொடிகாம பஸ் நிலையத்தில்) தவறி விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (13286)

வேலாயுதம் கிருஷ்ணகுமார் ஆகிய எனது அடையாளஅட்டை (702312663V) 23-05-90 அன்று திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து Jaffna Paint House 21 Clock Tower Road என்னும் விலாசத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (13290)

## தேவை

பேக்கரி பாண், கேக், ஐசிங் வேலைகள் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சுபாஸ் கபே, 176, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3716)

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி [Deep Freezer] தேவை. விலை விபரம் கொள்ளளவு போன்ற விபரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்க தா. கந்தராஜா, கச்சாய் றோட், 4ஆம் வீதி சாவகச்சேரி. (3708)

## மணமகன் தேவை

யாழ் நகர் கல்லூரியில் ஆசிரியையாக பணிபுரியும் 28 வயதான யாழ் இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த ஆசிரியைக்கு அரசாங்க உத்தியோக மணமகன் தேவை. 129, மே/பா, உதயன். [13256]

யாழ்ப்பாணம் செட்டியார் குலத்தைச் சேர்ந்த கௌரவமான சைவ போசனமுள்ள அரசாங்கப் பாடசாலையில் ஆசிரியையாக கடமை புரியும் செவ்வாய் தோஷமுள்ள 34 வயதுடைய மணமகளுக்கு சைவ போசனமுடைய அரசாங்க உத்தியோஸ்தரை பெற்றோர் தேடுகின்றனர். சீதனம் நேரில். இல 132 C/o உதயன் யாழ்ப்பாணம். (13282)

## மணமகள் தேவை

யாழ். இந்து குருகுல 38 வயதுடைய ஜேர்மனியில் வசிப்பவருக்கு அழகிய, சிவந்த, ஒழுக்கமுள்ள 25-30 வயதுடைய மணமகள் தேவை. ஜேர்மனியில் வசிக்கும் மணமகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். வேறு உயர் ஜாதியினரும் விண்ணப்பிக்கலாம். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. சாதக குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். இல. 703 C/o Uthayan. (3714)

## ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39 / 17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C / 4361)

## TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும். நாடுங்கள் FUDO39/17. மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில். (C4362)

## FOR SALE

G. E. C. Double Door Fridge and Other Electrical Items For Sale 376, Navalar Road, Jaffna (Near Rasavinthotam). (C/4589)

ஓகன் (Electric) 10 Beats 6 Tones Hardly Used Offers Above 10, 000/- Seen on Sunday at 53, A.V. Road, Colombo thurai Jaffna. (13287)

For Immediate Sale at cost price brand new Olympus Microcassette Recorder with 4 Cassettes and Psion Oreganisea II, Model cm. 257, Arasady Road, Kandarmadam Jaffna. (3715)

## கோழிக்குஞ்சுவிநியோகம்

ஒரு மாத Hylineவெள்ளை சிவப்பு, கறுப்பு, பேட்டுக் குஞ்சுகள் (தடுப்பூசி போடப்பட்டது) விற்பனைக்குண்டு சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி, லேன். கொக்குவில் [3499]

## Restaurant

யாழ் சைனீஸ் றெஸ்ற்ரோறன்ற், முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், அறைகளும் வாடகைக்கு உண்டு. [3430]

## வாங்கலாம்! விற்கலாம்!

பழைய புத்தகங்கள், வாங்கப்படும். ஏராளமான O/L புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், கதைப் புத்தகங்கள், சஞ்சிகைகள், விற்பனைக்குண்டு. சேனாதிராசா, Second Hand Book House 13/6 ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கிக்கு முன் லேன், யாழ்ப்பாணம். (3703)

## கண்டெடுக்கப்பட்டுள்ளன

அரியாலை J/46 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த செ. இராசேந்திரம் குடும்பத்தினருடைய உணவு முத்திரைகள் (04) கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தொடர்பு கொள்ளவும். ''திருப்பரங் குன்றம்', 91/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், (3717)

## தொழில் கல்வி

Radio Officers (Ship) P.M.G. Telex Operators (International) இருபாலாரும் Airconditioning And Refrigeration, Electronics (City & Guilds) London வெளிநாடுகளில் பிரபல்யமானவை. சான்றிதழ் வழங்கப்படும் ஆரம்பம் 2-6-90 Nesta TechnicalInstitute 59, Station Road, Jaffna. (13098)

## நிவாரணம்வழங்க ஏற்பாடு

மட்டக்களப்பு மே 27

வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாலாயிரம் ரூபா தொழில் நிவாரண நிதியை இதுவரை பெற்றுக் கொள்ளாமல் இருக்கும் ஏனையோருக்கும் அதனை வழங்குவதற்கு ஏற்படி பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. நா தட்சனாமூர்த்தி ஏற்பாடுகள் செய்து வருகிறார். (இ-)

## கரப்பந்தாட்டம்

காங்கேசன்துறை, மே 27

வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை நலன் புரிச்சங்க 7 ஆவது ஆண்டு விழாவையொட்டி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆறுபேர், நாலுபேர் கொண்ட இரு போட்டிகள் 'ஓவர்சேம்' அடிப்படையில் நடத்தப்படும். (இ-68)

## விளையாட்டு விழா

பட்டிருப்பு மே 27

காத்தான்குடி - அன்நூர் இளைஞர் கழகம் எதிர்வரும் ஜூலை மாதம் விளையாட்டு விழாவொன்றை நடத்த இருக்கின்றது. இவ்விழாவில் சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம், நீச்சல் போட்டி, தோணிஓட்டம், போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறும். காத்தான்குடி உதவி அரச அதிபர் பிரிவுக்குள் வதிபவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். (க-121)

## முதலிடம்

பட்டிருப்பு மே 27

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற -'மட்டக்களப்பு மாவட்ட காத்தான்குடி சம்மேளனம் பிரதேச விளையாட்டுப்போட்டி ஒன்றை காத்தான்குடி விளையாட்டு மைதானத்தில் நடத்தியது. இப்போட்டியில் பதுறியா இளைஞர் கழகம் அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றது. (க-121)


# கம்பியூட்டர் கல்வி

✶ BASIC LANGUAGE
ஆரம்பம் 30 - May - 90 (திங்கள், புதன், வெள்ளி 1 . 15 p . m)

✶ LOTUS 1 - 2 - 3
ஆரம்பம் 7 - June - 90 9 a . m

✶ BASE III PLUS
ஆரம்பம் 7 - June - 90 (செவ்வாய், வியாழன்) 10 . 30 a . m

Join with us to Study the Latest Computer Technology




**UNIKCO COMPUTER CENTRE**

No 5, POWER HOUSE ROAD, 2, nd LANE, JAFFNA.

(வி/4630)


# ஆறாம் ஆண்டு எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்கள்



| | |
|---|---|
| கந்தப்பு ஸ்ரீபன் | கந்தப்பு ஸ்ரீபன் |
| தேவராசா (தேவா) | ஞானராசா (ஞானி) |
| மலர்வு: 22 - 08 - 1946 | மலர்வு: 39 - 08 - 1955 |
| உதிர்வு: 27 - 05 - 1984 | உதிர்வு: 29 - 02 - 1982 |

ஆண்டுகள் பல சென்றாலும் என் நெஞ்சினின்றும் நீங்காத இடம் பெற்ற என் அன்புச்செல்வங்களே! என் இரு கண்களின் ஒளி இழந்தது போல் தவிக்கின்றேன். என்றாலும் நீங்களிருவரும் ஆண்டவன் மடியில் வீற்றிருக்கும் நிலையை அகக் கண்ணால் கண்டு ஆறுதலடைகிறேன்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

— உங்கள் அம்மா

மருதங்கேணி,
தாளையடி.

[3564]

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

திரு. முருகேசு குமரேசு

தோற்றம்: 23 - 03 - 1936
மறைவு: 16 - 04 - 1986

தந்தையே ........
எங்கள் குடும்பத்தின்
ஒளிவிளக்கே! உங்களை
நினைத்திடும் பொழுதெல்லாம்
அழுதுவிடுகின்றோம்
நீங்கள் மறைந்து
நான்காண்டு சென்றதையா
ஆனால் நீங்கள் இன்னும் - நம்
கூடவே வாழ்வதாய் ஒரு பிரமை

உங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, மக்கள்.**

228/1, நாவலர் வீதி,
இலப்பையடி, யாழ்ப்பாணம்.

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி குமரேசு ஸ்ரீஜெயக்குமாரி
(தர்ஷிலி)
(யாழ்-திருக்குடும்பக் கன்னியர் மடம், பழையமாணவி)

அன்னையின் மடியில்: 14 - 07 - 1971
ஆண்டவன் அடியில்: 07 - 06 - 1989

அம்மா தர்ஷினியே!
என்னாளும் வசதியுள்ள
உனக்கு ......
தடிமல் வருத்தம்
தலையிடி காய்ச்சல் - என்று
ஒரு நோயும் இது
வரைக்கும் வந்ததில்லை
இறைவனுக்கு உன்மேல்
இரக்கம் போலும் - ஆனால்
காலனால்தான் இதை பொறுக்க
முடியவில்லையோ?
கல்யாணமேடை அலங்கரிக்க
கனவு கண்டோம் நாம் - ஆனால்
கன்னிப் பூவாகிய நீயோ
கல்லறையின் மடியினிலே
கருவறை ஆகியதேனோ
சகோதர சோகங்களின்
காய்ந்த நினைவுகளில்
வேர் பிடித்துக் கலக்கும்
இதயச் செடிகளின் காணிக்கை!

உன் பிரிவால் துடிக்கும்;
அம்மா, அண்ணாமார், தங்கை, அம்மம்மா,
அன்ரி, சித்தப்பா, சித்தி, சகோதரங்கள்,
உறவினர்கள், நண்பர்கள்,
(13277)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



இ. செல்லச்சாமி - பிரேமானந்தன்
2 ஆம் லெப்ரினன்ட் யூசி

தோற்றம்: 10 — 10 — 1963
மறைவு: 27 — 05 — 1987

இறந்து பெறுவதற்கு ஈழம் ஒன்றும்
யாசப் பொருளல்ல — என்று சொன்ன யாசகத்தில்
விரோதியே எங்கள் யூசி
இங்கே நீங்கள் இன்றி வாடுகின்றோம்
தனி மரமாய் வாடி
மரணத்தை கழுத்தில் மாலையாக கொண்டவரே
மாவீரரே செருக்களத்தில் நெஞ்சில் ஷெல்பட்டு
எங்கள் நினைவுகளில் நீங்கா இடம் பெற்றவரே
நாங்கள் உம்மை நினைக்கவில்லை — ஏனெனில்
நாங்கள் உம்மை மறக்கவில்லை

தாய், சகோதரர்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

மாணாங்காணை,
வல்வெட்டித்துறை.

(13205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

**பொருள்:**

(எம் காதலைப் பற்றி) அலர் எழுவதால் அரிய உயிர்போகாமல் நிற்கின்றது; எம் நல்வினைப் பயனால் அதைப் பலரும் அறியாமல் இருக்கின்றனர்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

27 - 05 - 1990 ந. பெ இலக்கம் 25


## அரிசியும், கோதுமை மாவும்!

கோதுமை மாவினதும், பாணினதும் விலைகள் மீண்டும் உயர்த்தப்படுகின்றன. ஒரு கிலோ மாவின் விலை 14 ரூபா 25 சதமாகிவிட்டது. பாணின் விலை ஐந்து ரூபா முப்பது சதம். இதே வேளை இறக்குமதி செய்யப்படும் அரிசியின் விலை கிலோவுக்கு ஒரு ரூபா ஐம்பது சதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

கோதுமை மாவின் பாவனையைக் குறைத்து அரிசியின் பாவனையை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக அரசு இப்படிச் செய்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

பெரும்போக அறுவடை முடிந்த கையோடு அரிசியின் சந்தை விலை இப்போது சராசரி 15 ரூபாவாக இருக்கிறது. கோதுமை மாவின் புதிய விலையான 14 ரூபா 50 சதத்துக்கும், அரிசியின் இப்போதைய சந்தை விலைக்கும் 50 சதமே வித்தியாசம்!

அதன் நிமித்தம் அரிசிப் பாவனை அதிகரிக்க இடமுண்டு. இது ஒரு தற்காலிக நிலைப்பாடாகத் தான் இருக்க முடியும். ஏனெனில் மா விலை உயர்ந்தது என்று கேள்வியுற்றதும் வர்த்தகர்கள் அரிசி விலையை உயர்த்தி விடுவார்கள். விலை ஒப்பீட்டில் அரிசி விலை உயர்ந்து நிற்பதும், மாவின் விலை குறைந்திருப்பதுமாக இருக்கும் போது மக்கள் மா, பாணின் பக்கமே சாய்வது இயல்பாகி விட்டது. தடுக்க முடியாத ஆபத்தாகி வருகிறது.

இதில் வேடிக்கையாக, ஆனால் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று உண்டு. இலங்கை மக்களின் பிரதான உணவுத் தானியமாகக் கருதப்படுவது அரிசி. ஆனால் மா-பாணின் விலையை வைத்தே அரிசியின் விலையும் நடைமுறையில் ஏறி இறங்குகிறது.

இது எதனைக் காட்டுகிறது? எப்படித்தான் எடுத்துக் கூறினாலும் மக்கள் மா-பாணின் பக்கமே சாய்கிறார்கள். மா-பாணின் விலை அரிசியின் விலையை மட்டுமன்றி, ஏனைய சகல உணவுப் பொருள்களினதும் விலைகளையும் நிர்ணயிக்கின்றன. ஏன், வாழ்க்கைச் செலவின் ஏற்ற இறக்கமும் மா-பாண் விலையை அடிப்படையாக வைத்தே கூடிக் குறைவதை நடைமுறையில் காண முடிகிறது.

உதாரணமாக, நாளாந்த ஊதியம் வாங்கும் தொழிலாளர்கள், மற்றும் உழைப்பாளிகள் மா, பாண் விலையைக் கூறியே தமது சம்பளத்தைக் கூட்டுகிறார்கள். அதாவது மா-பாண் விலையே ஏனைய பொருள்களின் விலைகளை நிர்ணயிக்கும் அளவு கோலாகவும், வாழ்க்கைச் செலவை வானளாவ உயர்த்தி எழுப்பும் கல்லாகவும் விளங்குகிறது. இந்த நடைமுறை யதார்த்தத்தைத் தெரிந்து கொள்ளாமல், கவனத்தில் எடுக்காமல், மத்திய வங்கியும், நிதி அமைச்சும் தங்கள் மரபு முறைக் கணக்கு வழியில் புள்ளி விவரங்களைத் தயாரித்து என்ன பயன்?

அரிசி மற்றும் உள்ளூர் உற்பத்தித் தானியங்களை மக்கள் அதிகம் உண்ண வேண்டும். இறக்குமதித் தானியங்கள் குறிப்பாக, கோதுமை மாவின் பாவனையைக் குறைக்க வேண்டும் — என்ற குரல் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக ஒலித்து வருகிறது. அது இடைவெளி விட்டு விட்டு ஒலிப்பதையும் காண முடிகிறது. உலகச் சந்தையில் கோதுமை மாவின் விலை உயரும் போதெல்லாம் அந்தக்குரல் கனமாக ஒலிக்கும்; பின்னர் தணிந்துவிடும்!

மக்களை உள்ளூர் உற்பத்தித் தானியங்களை அதிகம் பாவிக்குமாறு வாயால் கேட்டு அது நடக்கப் போவதில்லை. நடைமுறையில் அவற்றின் விலைகள் இறக்குமதித் தானியத்தின் விலையை விட எப்போதுமே, நிரந்தரமாக குறைவாக இருக்கப் பார்த்துக் கொண்டால் காரியம் தானாகவே ஆகும். மா-பாணின் விலையை விட அரிசி, குரக்கன், சாமி, மரவள்ளி, சோளம், பயறு, உழுந்து, சோயா ஆகியவற்றின் விலைகள் அரைவாசிக்கும் கீழே இருக்கப் பார்த்துக் கொண்டால் குரல் கொடுக்கத் தேவையில்லாமல் மக்கள் உள்ளூர்த் தானியங்களை நாடுவார்கள். அவற்றில் தன்னிறைவு கண்டால் கோதுமை மா இறக்குமதியையே நிறுத்தி விடலாம்.

அது சாத்தியப்படுமா? அதற்கு என்ன செய்வது? அரிசி மற்றும் உள்ளூர்த் தானியங்களின் உற்பத்தி நிரந்தரமாக உயர்வதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். அவற்றை உற்பத்தி செய்வதற்கு மேலதிக ஊக்குவிப்புகள், சலுகைகள் கொடுக்க வேண்டும். தரிசு நிலங்கள் எல்லாவற்றிலும் பயிர்ச்செய்கை நடக்க வேண்டும். அதற்கான நடைமுறைச் சாத்தியமான, குறுகிய கால, நெடுங்கால, நிரந்தரத் திட்டங்கள் செயலாக்கப்பட வேண்டும். கோதுமை மாவின் இறக்குமதியை வெகுவாகக் குறைத்துக் கொண்டால், உள்ளூர் உற்பத்தியில் அதிக நாட்டத்தை உண்டாக்கலாம்.

அதை விடுத்து மா-பாண் பாவனையைக் குறையுங்கள். அரிசியை, ஏனைய தானியங்களை அதிக அளவில் சாப்பிடுங்கள் என்று இடைக்கிடை குரல் கொடுப்பதால் பொருளாதாரம் சீரடையப் போவதில்லை.

பிச்சைக்காரர்கள் போல, வெளிநாடுகளிடம் கையேந்திக் கடன் வாங்கி, கோதுமையை இறக்குமதி செய்து, பெரும்பகுதி மக்களை பட்டினிபோட்டு நாட்டைச் சீரழிக்க வேண்டியது தான்!

## பஜனைப்போட்டி

பச்சிலைப்பள்ளி, மே 27

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இந்து ஆலய பஜனைக் குழுக்களுக்கிடையிலான பஜனைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பளை இரட்டைக் கேணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும்.

பளை இந்து இளைஞர் கழகமும், பச்சிலைப்பள்ளி இந்து சமய வளர்ச்சிக் கழகமும் இணைந்து நடாத்தவுள்ள இப்போட்டியில் பன்னிரண்டு பஜனைக்குழுக்கள் கலந்து கொள்ளவுள்ளன. (இ-117)

## குரங்குகளால் தொல்லை

முல்லைத்தீவு மே 27

முல்லைத்தீவு கடைவீதியில் வியாபார நிலையங்கள், மற்றும் தேனீர், சாப்பாட்டுக்கடைகள் என்பவற்றின் கூரை ஓடுகள் குரங்குகளால் பிடுங்கி எறியப்படுகின்றன.

சாப்பாட்டுக் கடைகளின் சமையற்புறமாக உள்ளே நுழைந்து பெரும் தொல்லை தரும் இக்குரங்குகள் அப்பகுதியில் வளரும் முருங்கை மா உட்பட ஏனைய பயிர்களையும் அழித்து துவம்சம் செய்கின்றன. (ப-92)

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவும்

வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளின் போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கடன் வழங்க ஆசிய அபிவிருத்திவங்கி முன்வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமது விவசாய தொழிலை சீரமைக்கவும், சேதமுற்ற அல்லது அழிந்து போன வீடுகளை மீள அமைக்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் வழங்கும்.

கடன் வழங்குவதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்- இலங்கை வங்கியூடாக இந்த கடன் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இக்கடன் வழங்குவது தொடர்பான நடைமுறைகள் விரைவில் வெளியிடப்படும் என்று இலங்கை வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-10]

## சிறு கைத்தொழில் கடன்; அதிகாரிகளுக்கு விளக்கம்

யாழ்ப்பாணம் மே 27

சிறு கைத்தொழில்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தின் நடைமுறைகள் குறித்து வட பிராந்திய வங்கிக்கிளைகளின் முகாமையாளர்களுக்கும், கடன் வழங்கும் உத்தியோகத்தர்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பான கருத்தரங்கு ஒன்று அண்மையில் அநுராதபுரத்தில் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெற்றன.

உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கே கடன் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் இக்கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## தையல் பொருட்காட்சி

வட்டுக்கோட்டை, மே. 27

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவின் 1989 ஆம் ஆண்டு உடையமைத்தல் பயிற்சி நெறியின் தையல் பொருட்காட்சியும், பொருள் விற்பனையும் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை கல்லூரியில் நடைபெற்றும். (இ - 161)

## கண்காட்சி

வல்வெட்டித்துறை மே 27

கிராமிய மக்களின் கைவினைத்திறனை வளர்க்கும் பணியில் அவர்களுக்கு பல்வேறு பயிற்சி நெறிகளை நடத்திவந்த போரூட் நிறுவனம் அவர்களின்கைப்பணிப் பொருள்களைக் கொண்ட கண்காட்சி ஒன்றை கடந்த 21 ஆம் திகதி முதல் நடத்தி வருகிறது.

## முதலுதவிப்பயிற்சி

கைதடி மே 27

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள 16 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகளுக்கு முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட இருக்கின்றது.

இம்மாதம் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் இயக்கச்சி அ.த.க. பாடசாலையில் நடைபெற இருக்கும் இப்பயிற்சியில் பச்சிலைப் பள்ளியில் உள்ள 16 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களையும், யுவதிகளையும் கலந்துகொள்ளும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தென்மராட்சி சுகாதாரப்பிரிவு பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-74)

## யாழ்.ரயிலை தவறவிடும் மட்டக்களப்பு பயணிகள்

மட்டக்களப்பு மே 27

மட்டக்களப்பு - மாகோ சரக்கு ரயில் மட்டக்களப்பில் இருந்து உரிய நேரத்தில் புறப்படத் தவறுவதால் மட்டக்களப்பு பயணிகள் மாகோவில் இரவு யாழ். தபால் ரயிலைத் தவற விடுகின்றனர்.

ரயில் வழமையாக நண்பகல் 1 மணிக்கு மட்டக்களப்பை விட்டுப் புறப்பட வேண்டும். ஆனால் அது உரிய நேரத்தில் புறப்படுவதில்லை; மாகோ ரயில் நிலையத்திற்கு இந்த ரயில் தாமதித்து வந்து சேரும் போது யாழ். இரவு மெயில் ரயில் அனேகமாக மாகோவிலிருந்து புறப்பட்டு விடுகிறது. இதனால் பிரயாணிகள் இரவை மாகோ ரயில் நிலையத்தில் கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று புகார் கூறப்படுகிறது. (இ-ரி)

## தச்சங்காட்டு மயானம் அபிவிருத்தி செய்யப்படும்

காங்கேசன்துறை மே 27

ஸ்ரீலங்கா இராணுவத்தின் தாக்குதலால் முற்றாக சேதமடைந்திருக்கும் மாவிட்டபுரம் தச்சங்காட்டு சுடலையை புனரமைப்பது சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

அபிவிருத்திச் சபை போஷகர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம், ''சமுதாய முன்னேற்றத்திற்கேற்ப மயான அபிவிருத்தியில் பிரதேச சபைகள் கூடிய அக்கறை செலுத்தவேண்டும்'' என்றார்.

இந்த மயானத்தைப் புனரமைப்பது சம்பந்தமாக ஆராய விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மயானத்தைச் சுற்றி மதில் அமைத்தல், கிணற்றை புனரமைத்தல் போன்ற முடிவுகள் இக் கூட்டத்தில் எடுக்கப்பட்டன. (இ-68)

## மன்னாரில் சைவநெறித் தொண்டர் கழகம்

நீர்வேலி மே 27

மன்னார் மாவட்டத்தில் சைவநெறித் தொண்டர் கழகம் ஆரம்பிக்கப்பட்டு கிராமங்களில் அதன் கிளைகள் செயலாற்றி வருகின்றன.

இக்கழகம் கோயிற்குளம், புதுக்குளம், கூராய், இலுப்பைக்கடவை, உயிலங்குளம், வட்டக்கண்டல், அடம்பன் ஆகிய பகுதிகளில் சுமார் 300 க்கும் அதிகமானோருக்கு சமயதீட்சை செய்து வைத்தது.

திருக்கேதீச்சரம் மகாதுவட்டாமணி மண்டபத்தில் கழகத்தின் செயலகம் அமைந்துள்ளது. வாரமிருமுறைகள் பண்ணிசை வகுப்பும் சமய வகுப்பும் இங்கு நடைபெறுகின்றன.

கடந்த சிவராத்திரி தினத்தன்று திருக்கேதீஸ்வரத்தில் தொண்டர்சேவை செய்து நன்மதிப்புப்பெற்ற கழகம் வருடாந்த உற்சவகாலத்திலும் அடியார்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வதற்கு ஆயத்தங்கள் செய்து வருகின்றது. (ப-110)

# திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் மே 27

சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த உற்சவம் நாளை 28 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறும்.

எதிர் வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், வைகாசி விசாக தினமான மறுநாள் 6 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பல கல்லூரிகள், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மாவட்டங்களைச் சேர்ந்த அடியார்கள், சைவ அரசாங்க ஊழியர்கள் மற்றும் திருப்பணிச் சபைகள் சைவ மன்றங்கள் திருவிழாக்களின் உபயகாரராக இருப்பார்கள்.

திருக்கேதீஸ்வரப் பெருமானுக்கு நாளைமுதல் நடக்க இருக்கும்.

திருவிழாக்களும் அவற்றின் உபயகாரர் விபரமும் பின்வருமாறு:

28.5.90 கொடியேற்றம் திருமலை மாவட்ட சைவ அடியார்கள்.

29.5.90- 2 ஆம் திருவிழா சாவகச்சேரி இந்துக் கல்லூரி வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்.

30.5.90- 3 ஆம் திருவிழா கண்டி மத்திய மாகாணசைவ மகாசபை, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

31.5.90- 4 ஆம் திருவிழா சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, வண்ணைவைத்தீஸ்வரா வித்தியாலயம்.

1.6.90- 5 ஆம் திருவிழா தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

2.6.90- 6 ஆம் திருவிழா யாழ்.மத்திய கல்லூரி, பரு. ஹாட்லிக் கல்லூரி.

3.6.90- 7 ஆம் திருவிழா இராமநாதன் கல்லூரி, முல்லை, வவுனியா மாவட்ட சைவ அரசாங்க ஊழியர்கள்

4.6.90- 8 ஆம் திருவிழா மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி.

5.6.90- தேர்த் திருவிழா மன்னார் மகா சிவராத்திரி மட பரிபாலன சபை;

6.6.90- தீர்த்தோற்சவம் அயன் ஸ்ரோர்ஸ், மன்னார், உரும்பராய் இந்துக்கல்லூரி.

நாட்டில் சுமுக நிலை தோன்றியுள்ளதால் இம்முறை பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் திருவிழாக்களில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

### சமய நிகழ்ச்சிகளில்

## மகா கும்பமும் பொங்கல் விழாவும்

யாழ்ப்பாணம், மே.27

நயினை தெற்கு தில்லை வெளிப் பிடாரி அம்பாள் ஆலய வருடாந்த மகாகும்பமும், பொங்கல் (வேள்வி) விழாவும், ஜூன் 8ஆம் திகதி பூரணை விரத தினமான வெள்ளிக்கிழமை நடைபெறும். பொங்கல் விழா ஜூன் 16 ஆம் திகதி நடைபெறும். (இ7)

## உசன் கந்தசுவாமி வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், மே.27

உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.23 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்

ஜூன் மாதம் 7ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 8 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ-7)

## 1989 இல் பொலீஸ் சேவையில் இருந்த தமிழர்- முஸ்லிம்-சிங்களவர்

இலங்கை பொலீஸ் சேவையில் 30.11.1989 இல் 536 தமிழரும் 596 முஸ்லிம்களும் 21 ஆயிரத்து 435 சிங்களவர்களும் பணிபுரிந்தனர்.

பொலீஸ் ரிசர்வ் சேவையில் 15 ஆயிரத்து 336 சிங்களவரும் 592 தமிழரும் ஆயிரத்து 845 முஸ்லிம்களும் இருந்தனர்

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்பி திரு. மாவை சேனாதிராசாவின் கேள்வி ஒன்றுக்கு வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்டபதிலில் இத்தகவல் வெளியானது. (இ-எ)

## குழந்தைப்பராமரிப்பு

குழந்தைப் பராமரிப்புப்பற்றிய வகுப்புக்களை சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் புங்குடுதீவுப் பாடசாலைகளில் வாரந்தோறும் நடத்தி வருகின்றனர். (இ-7)

## முல்லை பயிலுநர் ஆசிரியர் பயிற்சி வகுப்பு ஆரம்பம்

மாங்குளம், மே 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன.

சனி, ஞாயிறு தினங்களில் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மாங்குளம். மகாவித்தியாலயங்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

மாங்குளம் மகாவித்தியாலயத்தில் ஒட்டுசுட்டான் பாண்டியன்குளம், துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரி

(7 ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் திருமுகம்

### மாநகரசபை வீதிகள்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பல வீதிகள் நீண்டகாலமாகத் திருத்தம் செய்து பராமரிக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றன.

ஆனந்தவடலி வீதி, நெடுங்குளம் வீதி, உப்புக்குளம்வீதி, வண்டி வீதி, மணிப்புரி வீதி, வசந்தபுரம் வீதி, கடற்கரை வீதி உட்படப்பல குறு ஒழுங்கைகள் கூட நீண்டகாலமாகத் திருத்தம் செய்யப்படாது இருக்கின்றன. இவ் வீதிகள் வாகனம் வண்டிகள் போக்குவரத்துக்கு உதவாத நிலையில் உள்ளன.

சி. சி. வரதராசா,
கொழும்புத்துறை.

### முல்லைத்தீவு வைத்தியசாலை

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் மருந்து எடுக்கச் செல்பவர்கள் அங்குள்ள கன்ரீனில் இருபத்தைந்து சதம் கொடுத்து கடதாசி (Half Sheets) வாங்கிச் சென்றே மருந்து எடுக்க வேண்டியிருக்கிறது.

காரணம் வெளிநோயாளருக்கு வழங்கும் ரிச்கட் பல மாதங்களாக வைத்தியசாலையில் இல்லாமல் இருப்பதாகும் வவுனியா பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் கவனத்துக்கு இதை முன் வைக்கிறேன்.

ச. பொ. சாமி,
முல்லைத்தீவு.

## பெயர் மாற்றம்

அம்பாறை, மே 27

கல்முனை கல்வி மாவட்டத்தில் இயங்கிவரும் கோட்டக் கல்வி அலுவலகங்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர் அலுவலகங்கள் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி கல்முனை, அக்கரைப்பற்று, திருக்கோவில் கோட்டக்கல்வி அலுவலகம் உதவிக் கல்விப்பணிப்பாளர் அலுவலகங்கள் எனப் பெயர் மாற்றம்செய்யப்பட்டுள்ளன. (இ-14)

## கண்டதும் கேட்டதும்

இலங்கை அரசியல் யாப்புப் பற்றி ஒரு கதை உண்டு.

பிரிட்டனில் உள்ள புத்தகக் கடை ஒன்றில் ஒருவர் போய் 'ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்பு உண்டா?' என்று கேட்டாராம்.

''நாங்கள் இங்கு மாதாந்த சஞ்சிகைகள் விற்பதில்லை'' என்ற பதில் கிடைத்ததாம்.

அது போலவே தான் எமது கல்விக் கொள்கையும்.

அரசாங்கங்கள் மாறமாற ஆண்டுக்காண்டு, மாதத்துக்கு மாதம் கல்விக் கொள்கைகள் மாறுகின்றன.

கல்விக் கொள்கைகள் இப்படி அடிக்கடி மாறுவதால் அதை நடைமுறைப்படுத்தும் திட்டங்களும் மாறுகின்றன.

இதில் அண்மைக்கால விஷயம், பாடசாலை மாணவர்களுக்கான மதிய போசனம்.

எத்தனை ஆட்டங்களை, மாற்றங்களை இந்த விஷயம் கண்டுவிட்டது. இதனால் பள்ளிப் பிள்ளைகளும், பெற்றோரும் ஆசிரியர்களும் எத்தனை கஷ்டங்களைச் சந்திக்கிறார்கள்.

பெரிய விஷயங்களை விட்டு ஒரு சிறிய விஷயத்தை எடுப்போம்.

மதிய போசனத் திட்டம் அமுலுக்கு வந்தபோது, கோப்பைகளுக்கு ஒரே கிராக்கி. ஒவ்வொரு பிள்ளையும் கோப்பை கொண்டு போனால்தான் சாப்பாடு.

இந்த நிலைமையில் கடைகளில் கிடந்த கோப்பைகள் எல்லாம் விற்றுப்போயின.

இப்பொழுது உணவுகொடுப்பதைவிட்டு முத்திரை வழங்குவது வந்துள்ளது.

கோப்பை போய் ('ரிபன் கறியர்') சாப்பாடு கொண்டு செல்லும் பிளாஸ்ரிக் பெட்டிகளின் தேவை பெரிதாக ஏற்பட்டுள்ளது.

இப்பொழுது யாழ்ப்பாணம் முழுவதிலும் உள்ள சாப்பாட்டுப் பெட்டிகள் இந்தத் தேவையை பூர்த்தி செய்யப் போதா என்று வர்த்தகர்கள் கூறுகின்றார்கள்.

இது எல்லாவற்றையும் பார்க்கும்போது சாப்பாட்டுப்பெட்டிகள் விற்பதற்குத் தானா கல்வித் திட்டம் என்று நினைக்கத் தோன்றுகின்றது அல்லவா?

செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்கள் பிரச்சினைக்கு இனவாத முலாம் பூசாதீர்கள்

## சபையில் ஈரோஸ் எம்.பி.

கொழும்பு, மே 27

மலையக மக்களின் பிரச்சினையில் விடுதலைப் புலிகளும் ஆதரவு தெரிவிக்கின்றனர் என்பதை வைத்துக்கொண்டு, அந்தப் பிரச்சினைக்கு இனவாத முலாம் பூசச் சிலர் முயற்சிக்கிறார்கள்.

மலையக மக்களை நாடு கடத்தக் கூடாது என்ற விடயத்தில் விடுதலைப் புலிகள் மட்டுமன்றி சகல தொழிற் சங்கங்களும், பல கட்சிகளும் ஆதரவு தெரிவிக்கின்றன. எனவே விடுதலைப் புலிகள் இவ்விடயத்தில் தலையிடுவதாகக் கூறிப் பிரசாரம் செய்வதை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் (ஈரோஸ்) சுயேச்சைக் குழு உறுப்பினரான திரு மலையப்பன் இராமலிங்கம். நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது சம்பந்தமான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இராமலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான வழியில் ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்துகொண்டிருக்கும் இயக்கங்கள் சில விடும் சில சிறு தவறுகளை பொருட்படுத்தாது அவர்களை நல்ல வழிக்கு வர அனுமதிக்க வேண்டும். மீண்டும் அவர்களை காட்டுக்கு அனுப்பும் நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்க வேண்டும் என்பதில் இச்சபை கவனம் செலுத்த வேண்டும்.

தலவாக்கலையில் மேதினத்தினை நடத்த மாற்றுக் கட்சிக்கு இடமளிக்கப்படவில்லை. அரசசார்பு தொழிற் சங்கமே மேதினக் கூட்டம் நடத்த இடமளிக்கப்பட்டது. எமது வாகனம் ஒன்றும் அடித்து நொறுக்கப்பட்டது. இவ்விடயத்தில் பொலீசார் ஏனோ தானோ முறையில் நடந்துகொண்டனர். எமது மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்ட கினிகத்தேனை தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர்.

மலையகத்தில் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கு முட்டுக் கட்டை போடப்படுகிறது. அப்படிச் செய்வதானால் ஏற்படும் விளைவுகள் பற்றி அண்மையில் நன்கு உணர்ந்திருப்பீர்கள். எனவே மலையக விடயத்தில் கவனத்துடன் நடக்காவிடின் பாரிய விளைவுகள் உருவாகும் ஆபத்து உண்டு.

மலையக மக்களைத் தூண்டுவதற்காக நான் இவ்வாறு கூறவில்லை. அவர்கள் மிகவும் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். எனவே அவர்கள் விடயத்தில் நன்கு ஆராய்ந்து செயற்பட வேண்டியது அவசியம்.

மலையக மக்களை நாடு கடத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் மனிதாபிமானமற்ற செயலாகும். தாய்-தந்தையர் செய்த தவறுக்காக அவர்களின் பிள்ளைகளை நாடு கடத்த எடுக்கும் நடவடிக்கையை சகல தொழிற்சங்கங்களும் எதிர்க்கின்றனர்; எதிர்க்கும்.

தோட்டக் காணிகளைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போது, எதிர்ப்புக் காரணமாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி கிடைக்கவில்லை.

காரணம் இன்றி மலையக இளைஞர்கள் கைது செய்யப்படுவது சிக்கலானது. கைது செய்வதற்கும் ஒரு ஒழுங்கு ஏற்பாடு இருக்கிறது. அதனைச் சரியாக அமுல்படுத்துவதே நல்லது -என்றார். (அ-எ)

## கலை இலக்கிய ஆண்டு விழா

யாழ்ப்பாணம், மே 27

லங்கா சிமெந்து நிறுவன கலை இலக்கிய முதலாவது ஆண்டு விழாவும் ''சங்கமம்'' என்னும் காலண்டுச் சஞ்சிகையின் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு நடேஸ்வரக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

லங்கா சிமெந்து நிறுவன முகாமையாளர் திரு. ம. ஜனநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் விழாவில் கலாநிதி நா. சுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

[illegible] துறை இளம் தமிழர் மன்றம், லங்கா சிமெந்து நிறுவனத்தின் கலை இலக்கிய வட்டம் ஆகியன பங்கு பற்றும் விவாத அரங்கு, யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் நடிக்கும் ''திக்கு விஜயம்'' என்ற நாடகம் ஆகியனவும் விழாவில் இடம் பெறும். (க)

# ஜெய்பூர் செயற்கை கால் நிலைய பணிக்கு மக்கள் உதவ வேண்டும்!

## கலந்துரையாடலில் பிரிட்டிஷ் தூதர் உரை

யாழ்ப்பாணம், மே 27

கால், கை இழந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் வகையில் ஜெய்பூர் செயற்கைக் கால் நிலையம் ஆற்றிவரும் பணி மகத்தான மனிதத் தன்மை வாய்ந்த பணிஆகும். யாழ்ப்பாணத்தில் உள்ள இந்த நிலையம் மிகவும் கஷ்டமான காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நிலையத்தின் பணி தொடர்ந்து வளர மக்கள் துணை புரிய வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு வந்திருந்த பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிட் கிறாட்ஸ்ரன் கடந்த வெள்ளி காலை ஜெய்பூர் செயற்கை கால் நிலையத்துக்கு வருகை தந்திருந்தார். அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரிட்டிஷ் தூதரையும் அவருடைய பாரியாரையும் ஜெய்பூர் செயற்கைக் கால் நிலையத்தின் துணைத் தலைவர் திருமதி ஈற்றா மேதரும் மற்றும் இயக்குனர் சபை உறுப்பினர்களும் வரவேற்றார்கள். டாக்டர் நச்சினார்க்கினியன், றெட்பானாவைச் சேர்ந்த சோதிராசா ஆகியோரும் அங்கிருந்தார்கள்.

ஜெய்பூர் செயற்கைக் கால் நிலையத்தின் பணிகளைப் பற்றி எடுத்துக் கூறிய திருமதி ஈற்றா மேதர், நிரந்தரக் கட்டடம் ஒன்று இல்லாமல் இருப்பது தான் தமது இன்றைய பெரிய பிரச்சினை என்று குறிப்பிட்டார். வசதி உள்ளவர்கள் நிலையத்துக்கு பண உதவி செய்ய முன்வர வேண்டும் என்று பிரிட்டிஷ் தூதரும் மற்றவர்களும் கருத்துத் தெரிவித்தார்கள்.

நிரந்தரக் காணி ஒன்றைக் கொள்வனவு செய்த பின், பிரிட்டிஷ் தூதரகம் நிலையக் கட்டடத்துக்கு இயன்ற உதவிகளைச் செய்யும் என்று பிரிட்டிஷ் தூதர் வாக்குறுதி அளித்தார்.

இப்பொழுது கிழக்கில் இருந்தும் நோயாளிகள் ஜெய்ப்பூர் நிலையத்துக்கு வருகின்றபடியால் கட்டடங்களின் விரிவாக்கம் அவசியமாகின்றது என்று திருமதி மேதர் சுட்டிக்காட்டினார்.

கலந்துரையாடலின் முடிவில் பிரிட்டிஷ் தூதரும் பாரியாரும் ஜெய்பூர் செயற்கைக் கால் நிலையத்தின் செயற்பாடுகளைச் சுற்றிப் பார்த்தார்கள். (க)

# ராஜமனோகரி - பிரேமச்சந்திரன் சபையில் சூடான வாக்குவாதம்

கொழும்பு, மே 27

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது சம்பந்தமான விவாதம் நடந்தபோது கல்வி துணை அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரனுக்கும், ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சே. பிரேமச்சந்திரனுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

திரு. பிரேமச்சந்திரன்பேசிக்கொண்டிருந்தபோது ஒருகட்டத்தில் பின்வருமாறு சொன்னார்:-

அமைதி என்பதன் பொருள் என்ன? அமைச்சர்கள் வடக்குக் கிழக்குக்குச் செல்ல முடியுமா? மக்கள் பொலீஸில் முறையிட முடியுமா?

இங்கு நாடாளுமன்றத்தில் ஈரோஸ், முஸ்லிம் காங்கிரஸ், ஈ. பி. ஆர். எல். எவ். எம்பிக்கள் இருக்கிறோம். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைநடத்துவதை விடுதலைப்புலிகள் விரும்பவில்லை. நாம் சர்வகட்சி மாநாட்டில் கலந்து பேசச் செல்லும்போது அவர்கள் ஓடுகிறார்கள். ஆனால் தேர்தலில் யாரும் போட்டியிடலாம் என்று கூறுகின்றனர்.

வடக்கு - கிழக்கில் ஆயுதம் தாங்கிய புலிகள் இருக்கும் போது சுதந்திரமான தேர்தல் நடப்பதை யார் உறுதிப்படுத்த முடியும்? நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு போய்வர முடிவதில்லை- என்றார்.

இந்தக் கட்டத்தில் துணை அமைச்சர் திருமதி ராஜமனோகரி சொன்னார்;-

என்னைப் பார்த்துக் கூறாதீர்கள். சபையைப் பார்த்துக் கூறாதீர்கள்.

[அதைத்தொடர்ந்துவாக்குவாதம் ஆரம்பமாகியது].

பிரேமச்சந்திரன்: நீங்கள் இங்கு அமைச்சராக இருப்பதற்குக் காரணமே எமது நிலைப்பாடுதான்.

துணை அமைச்சர்: நான் வடக்குக் கிழக்குக்குப் போய் வருகிறேன்.

[இருவரும் சிறிது நேரம் வாக்குவாதம் புரிந்தனர். அது சபையில் கேட்கவில்லை].

எம். பி: வடக்கு - கிழக்குப் பகுதியில் நீங்கள் புலிகளுடன் பேசியதில் என்ன சாதித்தீர்கள்?

மக்களுக்குநடக்கும் அநியாயங்களை அரசு அறியமுயல்வதாகத் தெரியவில்லை. முகாம்களுக்கு அருகில் வாழும் மக்களை இடம்பெயர்ந்துசெல்லுமாறு விடுதலைப்புலிகள் கூறுகிறார்கள்.

யுத்தம் ஒன்று ஏற்படப் போகிறதா என்பது வேறு விடயம். ஆனால் இதனால் பாதிக்கப்படப்போகிறவர்கள் பொதுமக்கள். மக்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினைச் சார்ந்தது.

துணை அமைச்சர்: இதைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்குத் தகுதியில்லை. தமிழ்க் குழுக்கள் முதலில் ஒன்று சேருங்கள். நீங்கள் மாகாண சபையை துப்பாக்கிமுனையில் தானே நடத்தினீர்கள்!

எம். பி: அங்கு இரத்தக் களரி ஒன்றை ஏற்படுத்துவதற்கு நீங்களும் ஒரு காரணமாக இருக்காதீர்கள்.

துணை அமைச்சர்: பேசிப் பேசி காலத்தை வீணாக்காமல் ஒன்று சேருவதற்கான முயற்சிகளைச் செய்யுங்கள். (அ-2)

# எதிர்வரும் சனியன்று சொக்கன் மணிவிழா

கொக்குவில், மே 27

ஈழத்தின் பிரபல சிறுகதை எழுத்தாளரும் கவிஞருமான சொக்கனின் மணிவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி வெகுசிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

மணிவிழாத் தலைவர் திரு. தி. கமலநாதன் தலைமையில் யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் இவ்விழா நடைபெறும்.

மணிவிழாவை ஒட்டி சொக்கனின் ஆக்கங்களின் கண்காட்சி ஒன்று வைத்திய கலாநிதி இராமநாதன் அரங்கில் அன்று காலை 9 00மணிமுதல் நண்பகல் வரை இடம்பெறும்.

பிற்பகல் 2 மணிக்கு திரு. சொக்கன் அவரது இல்லத்திலிருந்து விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்.

அங்கு அவர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் வரவேற்கப்படுவார்.

சைவப் பெரியார் சு பரநிருபசிங்கம் அரங்கில் நடைபெறும் மணிவிழா நிகழ்ச்சியை மணிவிழாச்சபை இணைச்செயலாளர் திரு. க. சிவராசா வரவேற்புரையுடன் ஆரம்பித்து வைப்பார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், மாவைமுருகன் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் ஸ்ரீசண்முகநாதக்குருக்கள், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். சோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி தியாகராசா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சு. மோகனதாஸ், மகேஸ்வரி வித்தியாசாலை அதிபர் திரு. சி. மு. கந்தையா, கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

மாலை 4.30 மணிக்கு சம்பந்தர் அரங்கில் மணிவிழா மலர் வெளியீடு நடைபெறும். மணிவிழா மலர் இணையாசிரியர் திரு. தி. ச. வரதராசன் அவர்களால் இம்மலர் வெளியிட்டு வைக்கப்படும்.

ஷப்றா இயக்குநரும், உதயன், சஞ்சீவி நிர்வாக இயக்குநருமான திரு. ஈ. சரவணபவன் முதற்பிரதியைப் பெறுவார்.

ஜப்பான், டோக்கியோ, கச்சுயின் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்துவார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அரங்கில் மாலை 5.30 மணிக்கு ''மாருதப்பிரவல்லி'' நாடக நூல் வெளியிட்டு வைக்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறை பேராசிரியர் சி சிவஞானசுந்தரம் (நந்தி) வெளியீட்டுரை நிகழ்த்துவார். யாழ். பல்கலைக் கழக மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவ கலாநிதி ஆ. நாகேஸ்வரன் முதற் பிரதியைப் பெறுவார். யாழ் பல்கலைக் கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் குழந்தை ம. சண்முகலிங்கம் இந்நூலுக்கு ஆய்வுரை நிகழ்த்துவார்.

சொக்கனின் பதிலுரையும், மணிவிழாச்சபை இணைச் செயலர் திரு. மு. யோகராசா அவர்களின் நன்றியுரையும் தொடர்ந்து நடைபெறும்.

அதன் பின்னர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. (உ-69)

## ரஷ்ய-ஜப்பான் வர்த்தக உறவு

டோக்கியோ மே 26

சோவியத் - ஜப்பான் வர்த்தக உறவில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருவதைத் தொடர்ந்து இப் பிராந்தியத்தை சுதந்திர வர்த்தக மண்டலமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வோய்பேர்க், நோவகரத் ஆகிய இடங்களும் சுதந்திர வர்த்தக மண்டலமாக்கப்படவுள்ளன. உல்லாசப் பயணிகள் பெருமளவு வரும் வோஸ்போக் நகரத்தில் அதிநவீன தொழில் நுட்பம் புகுத்தப்படவுள்ளது.

மேல்நாட்டுக் கம்பெனிகளின் உதவியுடன் எலட்ரிக் உபகரணப் பொருட்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் என்பன நோவகரத்தில் தயாரிக்கப்படும். [எ]

## கோர்பச்சேவை சந்தித்துப் பேச்சு

மாஸ்கோ மே 23

சுதந்திரப்பிரகடனம் செய்த ஏனைய இரண்டு பால்டிக் குடியரசுகளான எஸ்தோனியா, லற்வியா ஆகியவற்றின் தலைவர்களை மாஸ்கோவில் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்பச்சேவ் செவ்வாய் சந்தித்துப் பேசினார்.


# கேள்வி அறிவித்தல்

**பிரதேச கல்வித்திணைக்களம் - நல்லூர், யாழ்ப்பாணம்-**
**பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்**
**யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் கட்டட வேலைகள்**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித்திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 12ம் திகதி (12-06-1990) மு. ப. 10 00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனினும் கூடிய தொகைக்கு கட்டட வேலை செய்வதற்கென கல்வித்திணைக்களம், கட்டுவேலைத்திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டடத்திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1990ஆம் ஆண்டு யூன் மாதம் 08ஆம் திகதி (08-06-1990) பிற்பகல் 2 00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் வைப்புப்பணமாக (ரூபா 50/-) ரூபா ஐம்பதும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் ரூ. 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் யாழ் கல்வித்திணைக்களத்தில் வழங்கப்படும். மீளளிக்கப்படாத கேள்விப் பணம் ரூபா ஐம்பதும் பணமாக கல்வித் திணைக்களத்தில் செலுத்தப்படல் வேண்டும். கேள்வி வைப்புப்பணம் வங்கிக்கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1990ம் ஆண்டு யூன் மாதம் 12ம் திகதி (12-06-90) முற்பகல் 10.30 மணிக்கு யாழ் கல்வித்திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அது பற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றித் தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப்பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணைப்படியும், ஒப்பந்தப்பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்திசெய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ் பிரதேச கல்வித் திணைக்களத்தில் கட்டட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இ. சுந்தரலிங்கம்
பிரதேச கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேச கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1990-05-25

| | பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 01. | யா/கோண்டாவில் றோ. க. த. க. பா. | 20'—10' கட்டிடம் | 100,000.00 |
| 02. | யா/கொழும்புத்துறை துரையப்பா ம. வி. | ,, ,, | ,, ,, |
| 03. | யா/நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தி | ,, ,, | ,, ,, |
| 04. | யா/காங்கேசன்துறை ம. வி. | ,, ,, | ,, ,, |
| 05. | யா/பொலிகண்டி அ. மி. த. க. பாடசாலை | ,, ,, | ,, ,, |
| 06. | யா/தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி | ,, ,, | ,, ,, |
| 07. | யா/வல்வெட்டி அ. மி. த. க. பாடசாலை | ,, ,, | ,, ,, |
| 08. | யா/விடத்தப்பளை கமலாசினி வித்தி | ,, ,, | ,, ,, |

[சி-4538]


### ஓய்வுபெற முன்வரும்

# போக்குவரத்துச் சபை ஊழியர் பஸ் வாங்குவதற்குக் கடன்

கொழும்பு, மே 27

ஓய்வுபெற முன்வரும் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் எவராவது தனியார் பஸ் சேவையை நடத்த விரும்பினால் அதற்காக வங்கிக் கடனுதவி வழங்க அரசு தயாராக உள்ளது.

அமைச்சர் விஜேபால மெண்டிஸ் இதனைத் தெரிவித்தார்.

பஸ் ஒன்றை வாங்க அதன் பெறுமதியில் 80 சதவீதம் கடனாக வழங்கப்படும் என்றும் அமைச்சர் சொன்னார்.

வாங்கப்படும் பஸ் 30 பேர் அமரக்கூடியதாக இருந்தால் மட்டுமே இக்கடனுதவி கிடைக்கும். இக்கொள்வனவுக்கு சுங்க வரி விலக்கு ஆகியன உண்டு.

ஓய்வுபெறும் இ. போ. ச. ஊழியர் தனியார் சேவைகளை நடத்துவதற்கு பஸ்களை வாங்கக் கடன் வழங்குவதற்காக உலக வங்கி 60 கோடி ரூபாவை வழங்கி உள்ளது.

இன்னும் 4 ஆயிரம் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் சொன்னார். [எ]

## மலையக..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டதை ஆட்சேபித்து மலையகம் எங்கும் பெரும் அளவில் வேலை நிறுத்தங்களும், உண்ணாவிரதப்போராட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து கடந்த 21 ஆம் திகதி [illegible] டதும் தெரிந்ததவையே. (இ-2)

## இரண்டு - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் பயணம் செய்த வெளிநாட்டுக் குழு ஒன்று போராளிகள் அமைப்பு ஒன்றினால் முதலில் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் மற்றொரு செய்தி தெரிவிக்கிறது. (அ-ப)


எமது நேற்றைய

# புதிய வெளியீடுகள்

1. Dr. ராஜசேகர், ★ நீபிகா ★ சரத்பாபு
'மன்னிக்க வேண்டுகிறேன்'
[ஒறிஜினல்]

2. சிதா★ செந்தாமரை ★ S.S.சந்திரன்
'சக்தி பராசக்தி'
[ஒறிஜினல்]

3. ரகுமான் ★ கனகா ★ கௌதமி
'சீதா'
[ஒறிஜினல்]

4. விஜயகாந் ★ அமலா ★ ராதாரவி
'புதுப்பாடகன்'
[ஒறிஜினல்]

5. M.G R ★ அஞ்சலிதேவி ★ வீரப்பா
'சர்வாதிகாரி'
[ஒறிஜினல்]

KVC சுகம் வீடியோ சென்ரர்.
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(சி-4539)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிரிட்டிஷ் ஏயர்வேஸ்' நிறுவனம் நடத்திய கடத்தல் நாடகம்!

## ஈழத்தமிழ் இளைஞர்களை அடைத்து வைத்து துன்புறுத்தல்

மூன்றுஇலங்கைத் தமிழர்கள்கடந்தஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி ரோம் விமான நிலையம் சென்றுஇறங்கினர்.

அங்கிருந்து பிரிட்டிஷ் எயர் வேஸ் 556 விமானத்தில் ஏறினர்.

ஏறுவதற்கு முன்னர் அவர்கள் வைத்திருந்த பாஸ்போர்ட்கள், டிக்கட்கள் ஆகியவற்றை பிரிட்டிஷ் எயர்வேஸ் ஒப்பந்தி ஒருவர் எதுவித விளக்கமும் கூறாது பறிமுதல் செய்தார்.

லண்டன் ஹீத்றூ விமான நிலையத்தை விமானம் வந்தடைந்ததும் ஏனைய பயணிகளில் இருந்து இந்த மூன்று இலங்கைத் தமிழர்களும் பிரித்து வைக்கப்பட்டனர்.

பின்னர் அவர்களை பிரிட்டிஷ் ஏயர்வேஸ் அதிகாரிகள் இருவர் அந்த நிறுவனத்துக்கு சொந்தமான வான் ஒன்றுக்கு பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

விமான நிலைய ஓடு பாதையில் அந்த வான் ஒரு மணித்தியாலமாக நின்றது.

மூன்று தமிழ் இளைஞர்களும் தாங்கள் அடைக்கலம் கோருவதாகவும் குடியகல்வு அதிகாரிகளிடம் இது சம்பந்தமாகப் பேச அனுமதிக்கும்படியும் ஆங்கிலத்தில் விண்ணப்பித்தனர். பிரிட்டிஷ் எயர்வேஸ் அதிகாரிகள் இதனை ஏற்க மறுத்தனர்.

இறுதியாகஇவர்கள்விமான நிலையத்தில்உள்ள விமான சேவை அலுவலகத்தினுள் வைத்துப் பூட்டப்பட்டனர்.

அங்கு வைத்துஅவர்களுக்கு உணவும் மற்றும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

மூன்று தமிழ் இளைஞர்களில் ஒருவரான 21 வயதான வாசுதேவா கிருஷ்ணன் என்பவர் எப்படியோ லண்டனில் உள்ள தனது உறவினருக்கு தொலைபேசி மூலம் விஷயத்தைத் தெரிவித்தார்.

அவரின் உறவினர்கள் உடனடியாக சொலிசிட்டர் ஒருவர் மூலம் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சின் விமான நிலைய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டனர்.

> பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோருவதற்காகச் சென்ற மூன்று ஈழத் தமிழ் இளைஞர்களை "பிரிட்டிஷ் எயர் வேய்ஸ்" நிறுவனத்தினர் பிரிட்டிஷ் குடியகல்வு அதிகாரிகளுக்குத் தெரியாமல் மறைத்து வைத்திருந்து பின்னர் இலங்கைக்குக் கடத்தினர். இந்தச் செய்தி நேற்றைய சஞ்சிவியில் வெளியாகியிருந்தது. இந்தச் சம்பவம் பற்றிய முழு விபரம் இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

அப்படி அடைக்கலம் கோர வந்தவர்கள் தடுத்து வைக்கப்படவில்லை என்று அவர்களுக்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரண்டு மணித்தியாலமாக தடுத்து வைக்கப்பட்ட பின்னர் இந்த மூன்று இளைஞர்களும் பிரிட்டிஷ் எயர்வேஸ் விமானம் மூலம் ரோமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அப்படி அனுப்பப்படுவதாக உத்தியோக பூர்வமாக அந்த இளைஞர்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

ரோமில் இந்த இளைஞர்கள் இத்தாலி பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டனர். பின்னர் இன்னொரு விமானத்தில் இந்த இளைஞர்கள் ஏற்றப்பட்டு பம்பாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பம்பாயில் வைத்து இவர்களில் இரண்டுபேர் மோசமாக இந்திய அதிகாரிகளால் தாக்கப்பட்டனர்.

பம்பாயில் இருந்து இவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

பிரிட்டிஷ் எயர்வேஸின் இந்த நடவடிக்கை அகதிகள் ஏஜன்ஸிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது.

பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு இந்தச் சம்பவத்தை ஊர்ஜிதம் செய்தது.

பிரிட்டிஷ் அகதிகள் கவுன்ஸில் பணிப்பாளர் அல்ப் டப்ஸ் இச் சம்பவம் பற்றிச் சொன்னதாவது;

'பிரிட்டிஷ் ஏயர்வேஸின் செயல் சட்டவிரோதமானது.

"இது ஒரு கடத்தல் நடவடிக்கையாகும் தனியார் நிறுவனம் ஒன்று ஆட்களைத் தடுத்து வைத்து, பின்னர் விமானத்தில் ஏற்றி நிர்ப்பந்தமாக அனுப்பி வைப்பதை அனுமதிக்க முடியாது.

இதனை அரசு ஏற்றுக்கொண்டால் தனியார் நிறுவனங்கள் ஆட்களைக் கைது செய்ய அனுமதிக்கப்படுகிறது என்பது தான் அர்த்தம்.

அகதிகள் உரிமை, சிவில் சுதந்திரம் பற்றிய அரசின் கட்டுப்பாடுகளை எல்லாம் முட்டாள்தனமானவையாக்கப்படும் முயற்சியாக இது அமைகின்றது."

இப்படி திரு. அல்ப் டப்ஸ் கூறினார்.

பிரிட்டிஷ் ஏயர்வேஸ் ஸ்தாபனம் பின்வருமாறு கூறுகிறது;

மூன்று தமிழர்களையும் நாம் துன்புறுத்தவில்லை.

செல்லுபடியாகக் கூடிய தஸ்தாவேஜ்'களின்றி பயணிகள் யாரையும் லண்டனில் கொண்டுவந்து இறக்கும் விமான சேவை நிறுவனங்களுக்கு அரசு தண்டம் விதிக்கிறது.

செல்லுபடியாகாத தஸ்தாவேஜுடன்வரும் ஒவ்வொரு பயணியின்பேரில் ஆயிரம் பவுண் அந்த விமானசேவை நிறுவனத்தால் அபராதமாகச் செலுத்தப்படவேண்டும்"-இப்படி பிரிட்டிஷ் எயர்வேஸ் நிறுவனம் கூறுகிறது.

தஞ்சம்கோரும் ஒவ்வொரு விண்ணப்பமும் முடிவு எடுப்பதற்காக உள்துறை அமைச்சுக்கு குடியகல்வு அதிகாரியால் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் குடியகல்வு சட்டம் தெரிவிக்கின்றது.

பிரிட்டிஷ் உள்துறைஅமைச்சுப் பேச்சாளர் ஒருவர் இச் சம்பவம்பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

'மூன்றுதமிழர்களும்திருப்பி அனுப்பப்பட்டபின்னர்தான் இந்த விஷயமே எமக்குத் தெரியவந்தது'' என்று சொன்னார்.

இக்கடத்தல் நடவடிக்கையை ஆதரிக்கின்றீர்களா! என்று கேட்டதற்குஉள்துறை அமைச்சுப் பேச்சாளர், "இது எமக்கு உரிய விஷயம்அல்ல'-என்று சொன்னார்,

தொழிற் கட்சி எம். பி. அலிஸ்டாயர் டார்லிங் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் அகதிகள் உரிமைக்கும் நாட்டுக்கும் இடையில் தனியார் பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று நிற்பதைப் பொறுத்துக்கொள்ளமுடியாது'-என்று சொன்னார். ★


# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்கும், கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**O/L**

DAY CLASSES பிரிவு 2
[8.30 — 1.30]
ஆரம்பம்: 06 - 06 - 1990

SAT, SUN பிரிவு 2
[8 00 — 2.00]
ஆரம்பம்: 02 - 06 - 1990

- ★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினரால் போதிக்கப்படும்.
- ★ கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும் ஒரே நிறுவனம்.
- ★ இலவசப் பயிற்சிப் பரீட்சைகள் நடாத்தப்படும்.
- ★ விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

[சி-4591]



# தொழிற் பயிற்சிகள்

ஆண் பயிலுநர்களிடமிருந்து பின்வரும் பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வெல்டிங் - 4 மாதகாலப் பயிற்சி
   மாதாந்தக்கட்டணம் 500/-
2. விவசாயம் - 1 வருடம் இலவசம்

மேற்படி இரு பயிற்சிக்கும் இலவச உணவும், தங்குமிட வசதியும் கொடுக்கப்படும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 3/- முத்திரைகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்,
இளைஞர் பயிற்சி நிலையம்,
பரந்தன்.

[சி-4598]






விலை: 12 கொண்டது ரூ.24/-
20 கொண்டது ரூ.40/-

JWT CTC 20625

ஜோன் பிளேயர் · கோல்ட் லீஃப்

அரசாங்க எச்சரிக்கை:
புகைபிடித்தல் உடல் நலத்துக்குக் கேடாகலாம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி பஸ் சேவை நீடிப்பு

பருத்தித்துறை, மே 27

பருத்தித்துறை சாலை நடத்திவந்த பருத்தித்துறை-ஆழியவளை பஸ் சேவை வெற்றிலைக்கேணிவரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் வடமராட்சி கிழக்கில் சேவையிலீடுபடும் இரு பஸ்களும் நாகர்கோவில் கரையூர் வரை சென்று திரும்பவேண்டுமென சாலை அத்தியட்சகர் பணித்துள்ளார். (ப-118)

## பரிசு பெற்றோர் விவரம்

குருநகர் மே 27

வண-லோங் அடிகளார் முத்திரை வெளியீட்டு விழாவை முன்னிட்டு கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை சம்பத்திரிசியார் கல்லூரியில் நடத்தப்பட்ட நாவன்மைப் போட்டியில் பரிசில்பெற்றவர்கள் விபரம் வருமாறு.

1 ஆம் இடம் செல்வி கமிலா குசைப்பிள்ளை, யாழ்ப்பாணம். 2 ஆம் இடம்: செல்வி றோசலின் சிங்கராஜா மானிப்பாய் 3 ஆம் இடம்: செல்வி மரீன் ராஜலக்சுமி இக்கிநேசியஸ், கிளிநொச்சி.

ஆறுதல் பரிசுகள் பெற்ற எழுவர்; 1. செல்வன் றெ பின்சன் ஜேசுதாஸன் மயிலிட்டி 2. செல்வி கரோலின் லோறன், கிளிநொச்சி. 3. செல்வி கதரின் பஞ்சுளா குருகுமுத்து, ஊரணி, 4. செல்வி நந்தினி றொபேட் மயிலிட்டி 5. செபஸ்ரியன் மெடோனா, உரும்பராய் 6. தேவஸ்ரீன் செபஸ்தியாம்பிள்ளை, மானிப்பாய். 7. செல்வி குயின்மேரி அகஸ்ரியன், வட்டக்கச்சி.

இவர்களுக்கான பரிசில்கள் செல்வாய்மாலைநாவலர்கலாசார மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன. (இ-51;

## தேசிய சேமிப்பு வங்கிச்சட்டம் திருத்தப்படும்

கொழும்பு, மே 27

தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் திருத்தப்படவிருக்கிறது.

இச்சட்டம் முதலில் 1971 இல் கொண்டு வரப்பட்டது.

திருத்தச் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தற்போதைய சட்டத்தின் 39 ஆவது பிரிவு 'சேமிப்பு வங்கி' என்று கூறப்படுகிறது.

திருத்தச்சட்டத்தின் படி ''சேமிப்பு, முதலீடு மற்றும் கடன்'' என்ற வார்த்தைகள் சேர்க்கப்படும். இதன் மூலம் வங்கியின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படும்.

சட்டத்தின் 47 ஆவது பிரிவு திருத்தப்படுவதன் மூலம் பத்து ஆண்டுகளாக எவராலும் உரிமைகோரப்படாமல் வங்கியில் உள்ள வைப்புப் பணம், அதற்கான வட்டியுடன் கோரப்படாத வைப்புப் பண நிதியத்துக்கு மாற்றப்படும். பின்னர் அப்பணம் வங்கியின் அதிகாரபூர்வ செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும்.

(இ - எ)

மக்கள் முகம்

## யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்க நிர்வாகிகள்

காங்கேசன்துறை, மே 27

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக்கூட்டத்தில் கீழ்காண்போர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: கே. என். ராஜரத்தினம், உபதலைவர் ஆர். ரவீந்திரன், செயளாலர் சி. இரஞ்சன், உப- செயலாளர் ம. வரதராஜசிங்கம், பொருளாளர் க. பாலகிருஷ்ணன் கணக்குப்பரிசோதகர் திருமதி எஸ். சிவமகேஸ்லீலா.

ரி. ரவீந்திரன், வ. நடராசா, என். ராஜசேகரம், செ. சுந்தரேஸ்வரன், சி. செல்வநாயகம், ச. தவேந்திரன் ஆகியோர் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது. (க-68)

---


## விற்பனைக்கு

1. ''USHA'' Bottle Coolers
2. ''GLACIO'' Fridge, மண்ணெண்ணெயிலும் மின்சாரத்திலும் இயங்கக் கூடியது
3. Remington, Olivetti, Kofa & Underwood Typewriters
4. நகைக்கடை அல்லது ஆய்வு கூடங்களுக்கு உபயோகமான தராசுகள்
5. Hot Air Ovens
6. மேசைகள், ஸ்ரூல்கள், சாப்பாட்டு அலுமாரிகள்
7. Air Conditioner
8. ஹோட்டல்களுக்கு உகந்த Sanyo இறைச்சி அரைக்கும் மிக்சர் மற்றும் பல

ஜெயாஸ் ஒக்ஷன் மாட்

161, மெயின் வீதி,

யாழ்ப்பாணம்.

[3625]


## 15 லட்சம் வீடமைப்புக்கடன்! விண்ணப்பத் திகதி நீடிப்பு

கோப்பாய், மே 27

15 லட்சம் வீடமைப்புக் கடன் பெறுவதற்கான விண்ணப்ப திகதி மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 23 ஆம்திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டு அவ்வப்பகுதி வீடமைப்பு உத்தியோகத்தரிடம் விண்ணப்பப்படிவங்கள் கையளிக்கப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது விண்ணப்பபடிவங்கள் முடிவடைந்ததால் விண்ணப்பமுடிவுதிகதி நீடிக்கப்பட்டுள்ளது. (இ-72)

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:

22 - 8 - 1941

இறப்பு:

27 - 5 - 1984

**கந்தப்பு ஸ்ரிபன் தேவராஜா**

ஆறாத துயரினிலே ஆறாண்டு கழிந்ததுமே!
மாறாத நினைவுடனே மண்தனிலே வாழுகிறோம்
நாளென்ன பொழுதென்ன உம் ஆத்மா சாந்திக்காக பிராத்திக்கிறோம்.

7, ஜெயமகால்,
சுற்குழிலேன்,
சாவகச்சேரி.

மனைவி, மக்கள்.

[3549]

---

## 6 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திரு. மார்க்கண்டு பாலசுந்தரம்**

(சுன்னாகம் பாலன்ஸ்ரோர் முன்னாள் உரிமையாளர்)

தோற்றம்: 29 - 11 - 1945

மறைவு: 02 - 06 - 1984

திதி:-27 . 05 . 1990

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்களை இழந்து தவிக்கும்
மனைவி, பிள்ளைகள்.

''பழமுதிர் சோலை''
ஏழாலை மேற்கு

(3638)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. திருநாவுக்கரசு ஜெயாதரன்**
**(தரன்)**

தாயின் மடியில் 01-02-1971

மண்ணில் 30-05-1987

திதி: 27.05 1990

எங்கள் அன்புச் செல்வமே!
நீ பிரிந்து ஆண்டு மூன்று சென்றாலும்
உன் நினைவு என்றும் எங்களை விட்டு அகலாது
உனது கொள்கைகள் நிலைக்கவேண்டும்
அந்த நாள் உன் ஆத்மா சாந்தியடையும்!


உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி.

நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(13281)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கணபதிப்பிள்ளை சுந்தரம் பிள்ளை**

(ஓய்வு பெற்ற அதிபர்)

தோற்றம் 3-8-1971

மறைவு 7-6-1989

திதி: 27.5.90

என்றென்றும் மாறாத நினைவு உங்கள் நினைவு
ஆத்மா சாந்தியடைய தினமும் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.

[3611]

---





இப்போது விற்பனைக்குத் தயாராக உள்ளன.

அங்லோ-ஏஷியன் பேர்டிலைசர்ஸ் லிமிட்டெட்

95 ஹைட் பார்க் கோணர் கொழும்பு - 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷப்றா கிண்ணத்துக்காக இன்று
# ஜொனியன்ஸ், ஜொலிஸ்ரார் மோதல்

யாழ்ப்பாணம் மே 27

ஷப்றா கிண்ணத்திற்காக ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் ஆதரவுடன் ஜொலிஸ்ராஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்ப



ஆர். மகிந்தா

டுத்தப்பட்ட ஓவர் கிரிக்கட் போட்டியின் இறுதிப் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

ஷப்றா கிண்ணத்திற்காக நான்காவது தடவையாக நடத்தப்படும் இப்போட்டிகள் இம்மாதம் 9 ஆம் திகதி முதல் நடைபெற்று வந்தன.

19 கழக அணிகள் நொக் கவுட் முறையில் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் பங்கு பற்றின.

இன்றைய இறுதியாட்டத்தில் விளையாடுவதற்கு யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணியும் தெரிவாகியிருந்தன என்பது தெரிந்ததே.

ஜொனியன்ஸ் அணிக்கு ஆர். மகிந்தாவும் ஜொலிஸ்ரார்ஸ் அணிக்கு கே. பிரேம்நாத்தும் தலைமை வகிக்கிறார்கள்.

இரு அணிகளும் பல அனுபவம் முதிர்ந்த சிறந்த வீரர்களையும், இளைய உற்சாகமான, துடிப்பான வீரர்களையும் கொண்டுள்ளதால் இன்றைய இறுதிப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்து ரசிகர்களுக்கு பெருவிருந்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய போட்டியில் மேலதிக அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். திருமதி எஸ். சண்முகநாதன் அவர்கள்



கே. பிரேம்நாத்

வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வழங்குவார்.

இன்றைய ஆட்டத்தில் சிறப்பாக விளையாடும் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த பந்து தடுப்பாளர், பல்துறை வல்லுநர் ஆகியோருக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

ஏற்கனவே நடைபெற்ற முதல் சுற்று, இரண்டாம் சுற்று. கால் இறுதி, அரையிறுதிப் போட்டிகளில் சிறப்பாகவிளையாடி துடுப்பாட்ட வீரர், பந்து வீச்சாளர், பந்து தடுப்பாளர் ஆகியோருக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன. (உ-மு)


**VERY SOON!**

Donald Ganeshakumar
Trophy
Limited Overs (50) Cricket
Tournament
Organised By
CENTRALITES SPORTS CLUB


## ஷப்றா
## கிரிக்கெட் புதிர்ப் போட்டி

கிரிக்கெட் ரசிகர்களே! விரையுங்கள்!! முந்துங்கள்!!!

ஷப்றா கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 4 ஆவது கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தின்போது நடக்கும் புதிர்ப்போட்டியில் கலந்து கொண்டு கவர்ச்சிகரமான பரிசுகளைப் பெறுங்கள்.

போட்டியில் கலந்து கொள்வது வெகு சுலபம்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் புதிர் வினாக்களுக்குரிய விடைகளை நிரப்பி, கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து 27 - 5 - 90 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பதாக இறுதி ஆட்டம் நடைபெறும் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இதற்கென வைத்துள்ள பெட்டிகளில் போடுவது தான்.

குறிப்பு: ஷப்றா, உதயன் நிறுவன ஊழியர்களோ, ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அங்கத்தினர்களோ அவர்களது குடும்ப உறுப்பினரோ புதிர்ப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.
நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

(i) டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தைப் பெறுபவர் யார்? ..............................

(ii) தனது முதல் கிரிக்கெட் டெஸ்டின் இரண்டு இன்னிங்ஸிலும் 'சதம்' அடித்த வீரர் யார்? ..............................

(iii) டெஸ்ட் ஆட்டம் ஒன்றின் ஒருநாள் ஆட்ட வேளைகள் (Session) ஒவ்வொன்றிலும் நூறு ஓட்டங்களைப் பெற்றவர் யார்? ..............................

(iv) ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் இந்திய வீரர் சுனில் கவாஸ்கர் அடித்த செஞ்சரி கள் எத்தனை? ..............................

(v) டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிகூடிய நேரம் எடுத்து இரட்டைச் சதம் அடித்தவர் யார்? ..............................

(vi) ஒரே டெஸ்ட் ஆட்டத்தின் இரு இன்னிங்ஸிலும் நூற்றி ஐம்பது ஓட்டங்களுக்கு மேல் எடுத்த துடுப்பாட்ட வீரர் யார்? ..............................

(vii) 'ஷப்றா' கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியை முதலில் நடத்திய அமைப்பு எது? ..............................

(viii) இவ்வாண்டு தேசிய வீரர் தினத்தன்று ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்ட முன்னாள் அகில இலங்கை கிரிக்கெட் அணித்தலைவர் யார்? ..............................

(ix) தற்போதைய டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களில் வயது குறைந்த வீரர் யார்? ..............................

(x) இவ்வாண்டு நடத்தப்பட்ட 'ஒஸ்ரலேசியா' கிரிக்கெட் போட்டியில் கௌரவிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் யார்? ..............................

பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

கையொப்பம்:- ..............................

## எமது பிரேரணை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் பேசும் மக்கள் தற்போது ஆயுதம் ஏந்திப் போராடியதனால் தான் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் கட்சிகள் முன்வந்தன. ஆனால் தற்பொழுது அவை ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு பின்னால் நிற்கின்றன.

ஆறாவது திருத்தம் நீக்கப்பட்டதன் பின்னர் தான் தமிழ் மக்களுடன் உண்மையான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ஆறாவது திருத்தம் நீக்கப்படவில்லையேல் நாடாளுமன்றம் தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறைகளைப் பிரயோகிக்கும் சட்டங்களை உருவாக்கும் சாதனமாகவே அதனை நாம் பார்க்க முடியும்.

எனவே அதனை நீக்குவதற்கான ஆதரவு தரும் நிலை சகல அரசியல் கட்சி மட்டங்களிலும் ஏற்பட வேண்டும். ஆறாவது திருத்தம் சம்மந்தமான எமது பிரேரணை நாடாளுமன்றத்தில் தோற்றுப் போகுமானால் ஈழப் போராட்டத்தின் அடுத்த கட்டத்தை நோக்கி நகருவதற்கு அது காரணமாக, கருவாக அமையும். இடைக்கால தீர்வு என்ற நிகழ்வின் நிகழ்கால வரலாறு நிகழாமல் போய் விடும்;- என்றார். (அ-10)

## முல்லை---

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும்,—

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும்.—

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (இ-94)

## ஆறாவது திருத்த----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கும் இடம்தரும் நோக்குடன், இந்த முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### ஈரோஸ் ஆதரவு தேடுகிறது

இதே வேளை—

ஈரோஸ் இயக்கத்தின் தலைமைப்பீடம், தமது ஈழவர் ஜனநாயக முன்னணி சார்பில் கொண்டுவர ஏற்பாடு செய்து வரும், ஆறாவது திருத்தத்தை நீக்கக் கோரும் தனிநபர் பிரேரணைக்கு, பல எதிர்க்கட்சி எம். பிக்களின் ஆதரவைத் திரட்டும் பணியைத் தொடங்கிவிட்டதாக, ஈ. ஜ. முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொழும்பில் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஈரோஸ் தலைமைப் பீடம் இதுவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பிக்களான திருவாளர்கள் மஹிந்தா ராஜபக்ஷ, ரி. டபிள்யு. ராஜரத்தினம், மங்கள முனசிங்கா ஆகியோரையும், ஐக்கிய தேசியக்கட்சியின் பொருளாளரான திரு. கே. கணேசலிங்கத்தையும் சந்தித்து ஆதரவு திரட்டியதாகவும் மேலும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதில் கொள்கையளவில் அக்கறை கொண்டவர்கள் என்பதால் அவர்களை ஈரோஸ் தலைமைப்பீடம் சந்தித்துப் பேசியதாகவும் பிரஸ்தாப நாடாளுமன்ற உறுப்பினர் சொன்னார்.

இதற்கிடையில் –

ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலதிபர் திரு. பாலகுமாரன், நிதி அமைச்சர் ஜனாப், ஏ. சி. எஸ். ஹமீத், ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா ஆகியோரையும் நேரில்சந்தித்து ஆறாவது அரசமைப்பை நீக்குவதன் அவசியம் குறித்து வலியுறுத்த இருக்கிறார் எனவும் தெரியவந்துள்ளது.

சந்திப்புக்கான ஏற்பாட்டைச் செய்வதற்குத் திரு. கணேசலிங்கத்தின் உதவி நாடப்பட்டுள்ளதாகவும் அறியவந்துள்ளது.

மேலும் --

ஆறாவது திருத்தத்தை நீக்குவது சம்பந்தமான தனிநபர் பிரேரணை கொண்டுவருவது குறித்து, ஈழவர் ஜனநாயக முன்னணி இதுவரை தமது கட்சிக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை என்றும், அப்படி அறிவித்தால் தாமும் அதற்கு எம். பிக்கள் மத்தியில் ஆதரவு திரட்ட முடியும் என்றும் ஈ. பி. ஆர். எல். எவ்வைச்சேர்ந்த எம். பி. திரு. கே. பிரேமச்சந்திரன் சொன்னார். (அ-2)

## விடுதலைப் புலிகள்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதன் முதலாக வடக்கு-கிழக்கு எங்கும் நடைபெற்ற இந்த வெற்றிகரமான ஹர்த்தால் நல்லதொரு ஆரம்பமாக இருக்கவேண்டும் என விரும்புகின்றோம்,

மலையகத்திற்காக குரல் கொடுக்க வலிமை மிக்க வடக்கு- கிழக்கு மக்களும் துணையிருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எம் மக்களுக்கு பெரும் நின்மதியை ஏற்படுத்தியிருக்கின்றது.

தொடர்ந்தும் இம் மக்களுக்காக, நாம் எடுக்கும் அரசியல் முயற்சிகளுக்கு விடுதலைப்புலிகளின் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-50)

### யாழ். பல்கலைக்கழக
# சித்த மருத்துவப் பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம் மே 27

1989 சித்த மருத்துவப் பரீட்சையின் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது இறுதி சித்த மருத்துவ சத்திரசிகிச்சை மாணி பரீட்சை முடிவுகள் மே 18ம் திகதி இலங்கை. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

முடிவுகள் வருமாறு:

*முதலாவது சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணிச்சோதனை முடிவுகள்*

**இரண்டாம் [கீழ்தரம்]**

செல்வி ஆர். ராஜீவி, எஸ். சிவக்கொழுந்து, செல்வி சி. சுமதி.

**சித்தி:**

செல்வி ஏ. எஸ். டி. அல்பிரெட், செல்வி எஸ். மோகமதி (படரதவில அதிவிசேட சித்தி), எம். ஏ. சிராஜுதீன் (படரதவில்அதிவிசேடசித்தி) செல்வி ஆர். மதிவதனா, ஜி. சிறீதரன், எஸ். யோகநாதன், செல்வி கே. கிருஷ்ண கௌரி, செல்வி எஸ். பானதி

*இரண்டாவது சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணிச்சோதனை முடிவுகள்*

**இரண்டாம் [கீழ்தரம்:]**

செல்வி எஸ். சியாமளா

**சித்தி**

செல்வி கே. ரேணுகா, செல்வி ஆர். சாந்தினி, செல்வி சி. சுகந்தி.

*மூன்றாவது சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணிச்சோதனை முடிவுகள்*

**இரண்டாம்[கீழ் தரம்]**

செல்வி பி. பத்மலோஜினி, செல்வி எஸ். சுமதி, பி. சுரேசன், செல்வி எஸ். வைஜயந்தி

**சித்தி:**

எஸ். சிறீசுப்ரமணியம், செல்வி எஸ். சிவமலர்[காயா சிகிச்சையில் அதிவிசேட சித்தி], செல்வி எஸ். திரிபுர நாயகி.

*நான்காவது சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணிச்சோதனை முடிவுகள்*

**இரண்டாம் [மேல்தரம்]**

செல்வி கே. நீலவேணியம்மாள் [பாலரோகம், சலாக்கியத்தில் அதிவிசேட சித்தி], செல்வி பி. சைலஜா (நிதான சிகிச்சை 11, சலாக்கியத்தில் அதிவிசேட சித்தி.

**இரண்டாம் [கீழ் தரம்]**

செல்வி ஏ. அம்பிகை, செல்வி என். ஜெயலக்சுமி, செல்வி என் பவளராணி (நிதான சிகிச்சை 11 இல் அதிவிசேட சித்தி), செல்வி என். சசிகலா, செல்வி ஆர். சற்குணதேவி.

**சித்தி:**

செல்விஎஸ். அமுதாம்பாள், செல்வி கே. நாகேஸ்வரி, செல்வி. ரி. நவலக்ஷ்மி, செல்வி ஆர். சிவசக்தி கே. சிவராசா செல்வி எஸ். சுதாமதி[பாலரோகத்தில் அதிவிசேட சித்தி], செல்வி ரி. இலைன் வரோனா [பாலரோகத்தில் அதிவிசேட சித்தி],

*இறுதி சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணிச்தோதனை முடிவுகள்*

**இரண்டாம் [மேல் தரம்]**

செல்வி பி. கலைச்செல்வி. செல்வி என். சயாமா (மகப்பேற்றியலில் அதி விசேட சித்தி), செல்வி வி. விவியன்.

**இரண்டாம் [கீழ் தரம்]**

செல்வி இ. திலகேஸ்வரி, செல்வி என். திலகேஸ்வரி. பி. வி. விமலதாஸ்.

**சித்தி**

செல்வி எஸ். அருந்தவராணி, செல்வி வி. கனகேஸ்வரி, செல்வி கே. மங்களகுமாரி, செல்வி பி. மங்களேஸ்வரி, செல்வி ஆர். நாகேஸ்வரி, செல்வி ஆர். ராஜராஜேஸ்வரி, ரி. சத்தியசீலன், செல்வி பி. சாந்தநாயகி, எஸ். வடிவேலு, எஸ். யோகேந்திரன், ஜ. ஜபனாம கணேசன். (சு)

## மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி



சின்னப்பொடி
(இளையதம்பி)
அருளானந்தம்
(உரிமையாளர், உமா கராஜ், வியாபாரிமூலை)

மலர்வு:- 15 - 08 - 1943
உதிர்வு:- 31 - 05 - 1987



அருளானந்தம்
சுதாகர்
(ஹாட்லி கல்லூரி ஏ. எல். மாணவன்)

மலர்வு:- 23 - 11 - 1969
உதிர்வு:- 31 - 05 - 1987

ஊனாய் உயிராய் எம்மோடு ஒன்றாய் வாழ்ந்தீர், அரக்கர்களால், வீணாய் மறைந்தீர், எம்முள்ளம் விம்ம விட்டுப் பிரிந்தீர்கள் தேனே அனைய செல்வங்களே. திரும்ப எப்போ காண்போமோ, உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி
அ. பரமேஸ்வரியும்,
பிள்ளைகளும்.

அன்பு அம்மாவும்,
சகோதரிகளும்,
தம்பியும்.

கயிலை, அல்வாய் வடக்கு, அல்வாய். (13289)

## நினைவஞ்சலி

2ஆம் ஆண்டு



அமரர்
காசிப்பிள்ளை
கிருஷ்ணபிள்ளை

படைப்பு: 10 - 03 - 1914
மறைவு: 19 - 05 - 1988

11ஆம் ஆண்டு



அமரர்
கிருஷ்ணபிள்ளை
சூரியகுமார்

படைப்பு: 19 - 05 - 1952
மறைவு: 17 - 06 - 1979

திதி: 27 - 05 - 1990

எமதருமை அன்புத் தெய்வங்களே!

ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள் நினைவலைகள் என்றென்றும் எம்மனதை விட்டகலாது. நீங்கள் வகுத்துத் தந்த நற்பாதையிலே அடியெடுத்துவைத்துச் செல்லும் நாங்கள் என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய மாலிசந்தி விநாயகனை வேண்டுதல் செய்கின்றோம்.

மனைவி, பிள்ளை, மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்,

கா. கி. மகேந்திரராசா,
உடுப்பிட்டி வீதி,
மாலிசந்தி, கரவெட்டி.

(13288)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமலையை அபகரிக்க அரசு திட்டமிடுகின்றது

## கவிஞர் வாஞ்சிநாதன் உரை

மட்டக்களப்பு, மே 27

"திருகோணமலை மாவட்டத்தில் இன்று சுமார் 60 சிறிலங்கா காவற்படை முகாம்கள் அமைந்திருக்கின்றன. சராசரி ஒரு மைலுக்கு ஒரு முகாம் என்ற வீதத்தில் சிங்களக் காவற்படை முகாம்களை 1983 ஆம் ஆண்டுக்குப் பின் ஏற்படுத்தியிருக்கும் ஸ்ரீலங்கா அரசு, திட்டமிட்டமுறையில் தமிழ்ப்பேசும் மக்களை திருக்கோணமலை மாவட்டத்தில் நசுக்க எண்ணியிருக்கிறது. தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பூமியாகிய திருகோணமலையை வெகுவிரைவில் அபகரிப்பதே அரசின் முழுமையான திட்டமாகும்."

அண்மையில்மூதூர் முஸ்லீம் வித்தியாலயத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரின் கூட்டமொன்றில் பேசும் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரும், கவிஞருமாகிய மு. வே. யோ. வாஞ்சிநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் அரசின் இந்த குள்ளநரித்தனத்தைப் புரிந்துகொண்டு ஒரே மொழியைப் பேசும் தமிழர்களும் முஸ்லீம்களும் தமக்கு இடையே நிலவிவரும் சிறு, சிறு கருத்து வேற்றுமைகளை மறந்து மண்ணின் நலனுக்காக இனியாவது ஒன்றுபட்டுச் செயலாற்ற முன்வர வேண்டும் என்றார்.

மேற்படி கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் ரூபனும் உரையாற்றினார். (இ)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்



மட்டுவில் தெற்கு

**சுப்பிரமணியம் கணேசலிங்கம்**

**B.A (Hons)**

*(நன்நடத்தை அதிகாரி வவுனியா)*

தோற்றம்: 27 - 10 - 1953

மறைவு: 30 - 04 - 1990

அன்னாரின் மறைவையொட்டி எமது துயரில் பங்கேற்று மரணச்சடங்குகளில் கலந்தும் அனுதாபச் செய்தி அனுப்பியும் உதவிய சகலருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் புதன் கிழமை (30-05-90) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரிகைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

**அன்பு மனைவி, க. கலாவதி**
**தாய், தந்தை, மாமன், மாமி, சகோதரர், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள், பெறாமக்கள்.**

"கமலபவனம்"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(3646)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 - 04 - 1930

அமரத்துவம்: 27 - 05 - 1987

**அமரர். அருளம்பலம் முத்துராஜா**

*(உபதபால் அதிபர், தொண்டமானாறு)*

**ஆண்டுத்திதி**

**24 - 05 - 1990**

அப்பா! நாம் உமை இழந்து ஆண்டுகள் மூன்றாகி மறைந்ததையா ஆயிரம் ஆண்டுகள் போனாலும் எம்துயர் எமைவிட்டுப் போகாது உங்கள் நினைவில் வாழ்கின்றோம் உங்களை நித்தம் துதிக்கின்றோம் உங்கள் ஆன்மா சாந்தி பெற, என்றும் சந்நிதியானை வேண்டுகிறோம்.

**மனைவியும், பிள்ளைகளும்.**

கெருடாவில்,
தொண்டைமானாறு.

(3647)


"குழல் இனிது யாழ் இனிதென்பர்
தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"



உங்கள் அன்புச செல்வங்களின் வளமான
எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை

# ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம். உங்கள் நண்பனுகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்

- ★ சகலவிதமான வாகனங்களுக்குமான தவணைக் கொள்வனவு நிதி
- ★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
- ★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
- ★ அடைமானக் கடன்கள்
- ★ அபிவிருத்தி நிதியிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

| Period-Months காலம் - மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | ● |

நிலையான வைப்பு TERM DEPOSIT

| Period - Months காலம் - மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | * | *7% |
| 06 | 15% | 16% |
| 12 | 19% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1986/87 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|
| மூலதனமும் ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,911 |
| வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கு செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,657 |
| பகிரப்பட்ட இலாபம் | | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

திரு எல். பி. ஈ. கருணாரட்ன,
சட்டத்தரணி, சமாதான, நீதவான், தலைவர்
திரு எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ன.
A.I.B. (Lond.). பொதுமுகாமையாளர்.
திரு. ஏ. எம். எச். பாரி, B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA

ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்.

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WANTED
## Internal Auditor

Wanted an experienced Internal Auditor for a leading establishment in Jaffna.


Age limit — 35 to 45 years
Salary — Negotiable

Apply with full Bio-data before 31st May 1990.

The Personnel Manager,
The Peninsula Group,
163, Kandy Road,
Ariyalai,
Jaffna.

(C/4586)


# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் ம. அச்சுதன்

அன்னையின்மடியில்: 26 - 11 - 1968
அரக்கனின்பிடியில்: 31 - 05 - 1987

திதி: 27 . 05 . 1990
(ஞாயிற்றுக்கிழமை)

பாசமகனே அச்சுதா! நீ பிரிந்து மூன்றாண்டு சென்றாலும் உன் சிந்தனைகள், உயர்ந்த நோக்கங்கள் உன் இலட்சியப் பாதையினைத் தொடரட்டும். நீ மரணித்தாலும் உன் செயல்கள் மரணிக்கவில்லை. உன் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

அப்பா, அம்மா, அண்ணா.

அறந்தாங்கி,
அல்வாய் வடக்கு.

(3639)

# ஓராண்டு நினைவஞ்சலி



## திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
(Retired Superintendent of Prisons)

தோற்றம்: 19-10-1918
மறைவு 06-06-1989

ஆண்டுத்திதி:- 27-5-1990

தந்தையாய், குருவாய், தலைவனாய் எம்மை வழிநடாத்தி இன்று சிவத்தோடு கலந்துவிட்ட உங்கள் இனிமையான நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலா.

சகோதரர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

(8630)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி





ஐ. நாகநாதன்
[இந்திரன்]
அன்னையவள் மடியில்:- 22- 05- 1968

அ. பிறேமகுலசிங்கம்
(பிறை)
அன்னையவள் மடியில் 08- 06- 1966

ஆண்டவன் அடியில்: 27- 05- 1987

உயிர் பிரிந்த உங்கள் உடல்கள் கிடந்த சோலம் — உங்கள்
உறக்க நிலையிலும் உறங்காத நினைவுக் கோலம்
ஆண்டுகள் மூன்று மறைந்து விட்டாலும் — நம் நெஞ்சங்களினின்றும்
அழியாது உங்களோடு வாழ்ந்த காலம்.

நினைவு கூரும்!
கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.
சு. அழகையா குடும்பம்

கோணாவளை, கெருடாவில், தொண்டாமானாறு.
வ. ஐயாத்துரை குடும்பம்

(3645)

★ இஸ்ரவேலின் அடக்கு முறையால்

# யுத்தவிளிம்பில் மத்திய கிழக்கு; யாசிர் அரபாத்கடும்எச்சரிக்கை

### ஐ.நா.சபைக்பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில்உரை

ஜெனிவா மே 26

பலஸ்தீன விடுதலை இலக்கத் தலைவர் யாசிர் அரபாத் ஐ.நா பாதுகாப்புச் சபையின் விசேட கூட்டத்தில் நேற்று முக்கிய உரை ஒன்றை நிகழ்த்தினார்.

இக் கூட்டம், அரபாத் கலந்து கொள்தற்காக ஜெனிவாவில் கூட்டப்பட்டது.

அரை மணித்தியாலம் வரை அரபாத், பலஸ்தீன மக்கள் இஸ்ரவேலின் அடக்குமுறைக்குட்பட்டு கஷ்டப்படுவதை விரிவாகத் தனது பேச்சில் தெரிவித்தார்.

சொந்த மண்ணை மீட்டு எடுப்பதற்காக பலஸ்தீன மக்கள் கடந்த 30 ஆண்டுகளாக தாயகம் மீட்புக்கிளர்ச்சியை நடத்தி வருகிறார்கள்.

இதில் ஈடுபட்டுவரும் பலஸ்தீனியர்களில் இதுவரை 80 ஆயிரம் பேர் இஸ்ரவேலின் இராணுவத் தாக்குதலுக்காலாகி காயமடைந்துள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 25 பலஸ்தீனியர் இஸ்ரவேல் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பலஸ்தீனிய இனத்தை முற்றாக அழித்து விடும் முயற்சியில் தான் இஸ்ரவேல் முழுமூச்சாக ஈடுபட்டு வருகிறது.

சர்வதேச சமாதானத்துக்குப் பயமுறுத்தலாக இஸ்ரவேலின் நடவடிக்கைகள் அமைந்து உள்ளது.

மத்திய கிழக்கில் மிகப்பெரிய அழிவு ஒன்றை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம்.

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன மண்ணில் இருந்து இஸ்ரவேலை வெளியேற்ற வேண்டும்.

இதற்கு முதல் நடவடிக்கையாக ஆக்கிரமிக்கப்பட்ட அரபு மண்ணில் வன்செயல்கள் இடம் பெறுவதைக் கண்காணிக்க ஐ.நா அவதானிகள் குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

அரபு மண்ணில் யூதர் குடியேற்றம் இடம்பெறுவது நிறுத்தப்பட வேண்டும்.

இப்படி அரபாத் சொன்னார். (எ)

## பர்னாலா பதவி ஏற்றார்

சென்னை, மே 26

தமிழ் நாட்டின் புதிய ஆளுநராக திரு சுர்ஜித்சிங் பர்னாலா நேற்று மாலை பதவி ஏற்றுக் கொண்டார்.

ராஜாஜி மண்டபத்தில் இவ்வைபவம் இடம் பெற்றது.

முதலமைச்சர் கருணாநிதி, சபாநாயகர் தமிழ்க்குடிமகன் உட்பட பலர் வைபவத்தில் கலந்து கொண்டனர். (இ-எ)

## ஐ நா அறிக்கை

லண்டன், மே 26

கடந்த பத்தாயிரம் ஆண்டுகளிலும் பார்க்க பூமியின் வெப்பம் 21 ஆம் நூற்றாண்டில் அதிகமாக இருக்கும் என்று ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

கால நிலையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களே இதற்குக் காரணம் என்று ஐநா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலத்தில் கார்பன்டைஒக்ஸைட் வாயு கலப்பது அதிகரித்து வருவதால் காலநிலையில் மாற்றம்ஏற்பட்டுவருகிறது என்றும்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## கீழைத்தேய ஆய்வுநூல் வெளியீடு

தாஷ்கண்ட், மே 26

சரகுஸ்உறானுலிக் என்ற பிரபல கீழைத்தேய ஆய்வு நூல் ஒன்றை உஸ்பெக் விஞ்ஞானப் பேரவை வெளியிடவுள்ளது.

புராதன மற்றும் இன்றையகீழைத்தேய நாடுகளின் கலை, கலாச்சாரம், இலக்கியம் என்பன இந்த ஆய்வு நூலில் விரிவாக அடகக்ப்பட்டிருககும்.

உஸ்பெக்மொழியில் அச்சிடப்படவுள்ள இப்புத்தகம் அபு-அல்-அய்றூன்-அல்புருலிகீழைத்தேய ஆய்வு நிலையத்தின் ஒரு படைப்பாக அமையும்.

அராபி, பார்ஸி, துருக்கி மொழிகளின் புராதன 40,000 கையெழுத்துப் பிரதிகளும் இதில் அடங்கப்பட்டிருக்கும்.

ஆயிரம் வருடங்களுக்கு முன்பான கையெழுத்துப் பிரதிகளும் இதில் அடங்குகின்றன என்று இந்நிலையத்தின் டைரக்டர் உருன்பாயல் தெரிவித்தார்.

ஷேய்க் முஹம்மத் மூனின் என்ற பிரபல கவிஞரின் விவரம் அடங்கிய ஓர் ஆய்வு நூல் ஒன்றை இந்தக் கிழைத்தேய ஆய்வு நிலையம் வெளியிட்டது.

(எ)



குமுலுஸ் D.F. போட்டி

# BASF
# குமுலுஸ் D.F.
## பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் "குமுலுஸ் DF போட்டி" என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.




வெட்டி அனுப்பவேண்டிய பகுதி




பெயர் ____________
முகவரி ____________
____________
வியாபாரியின் பெயர் ____________
____________
முகவரி ____________
____________

FINCHEM AGRO DIVISION
பின்லே கெமிக்கள்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186, வக்சோல் வீதி, கொழும்பு 2.

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாக பாவிக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடித் தெரிவில்
முன்னணி வகிப்பவர்கள்!
கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக பல் சட்டுவதிலும் கைதேர்ந்துவிளங்குபவர்கள்! யாழ் - ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் புதிய காட்சியறை நாளை 28 - 5 - 90 ஆரம்பிக்கப்பட இருப்பதை வாடிக்கையாளர்களுக்கு முன் கூட்டித் தெரிவிப்பதில் மகிழ்கிறோம்.
கிளை;
பி. ஐ, பெர்னான்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(அரசினர் வைத்தியசாலைஎதிரில்)
யாழ்ப்பாணம்.

# உதயன்

27 - 05 - 1990 ஞாயிற்றுக்கிழமை

பல் கட்டுவதில் கை தேர்ந்தவர்கள்!
கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கண்ணாடித் தெரிவிலும் முன்னணி வகிப்பவர்கள்!
யாழ் - ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் புதிய காட்சியறை நாளை 28 5 90 ஆரம்பிக்கப்பட இருப்பதை வாடிக்கையாளர்களுக்கு முன் கூட்டித் தெரிவிப்பதில் மகிழ்கிறோம்!
பி. ஐ, பெர்னான்டோ
247, பிரதானவீதி,
(டாக்டர் பி ிப்ஸ் வார்ட் முன்பு)
யாழ்ப்பாணம்.

அமைச்சர் ஹமீத் சொல்கிறார்:

## எமதுநாடு இன்னொரு யுத்தத்தை சமாளிக்கும் நிலையில் இல்லை!

### சமாதானத் தீர்வே அரசின் நிலைப்பாடு

கொழும்பு மே 27
வடக்கு - கிழக்குப் பிரச்சினை, அங்குள்ள நிலைமை என்பன குறித்து, ஸ்ரீல சு. கட்சியும், ஏனைய எதிர்க்கட்சிகளும் அரசின் மீது குற்றம் சுமத்துவது சுலபம். இந்தப் பிரச்சினையைக் கையாள்வது கஷ்டம் என்பதனை அவை புரிந்து கொள்ளவில்லை.

இந்த நாடு இன்னொரு யுத்தத்தைச் சமாளிக்கும் நிலையில் இல்லை. பிரச்சினைக்குத் தீர்வினை அடைய யுத்தம் ஏற்படக்கூடாது. சமாதானமான தீர்வே தேவை. இதுவே அரசின் நிலைப்பாடாகும்.

இவ்வாறு தெரிவித்தார் நிதி அமைச்சரும், வடக்கு-கிழக்கு மாகாண சமாதானக் குழுவின் தலைவருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது சம்பந்தமான விவாதம் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் ஹமீத் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கடந்த பத்து மாதங்களுக்கு மேலாகப் பேசி வருகிறோம். அரசியல் தீர்வை நோக்கியே அந்தப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

வடக்கு - கிழக்கு பிரச்சினைகளின் தன்மைகளை ஒட்டியே தீர்வு காணப்படவேண்டியுள்ளது. அவர்களின் கோரிக்கைகளை கவனித்தாகவேண்டி உள்ளது. பேச்சுவார்த்தைகளில் தடங்கல் ஏற்படலாம். ஆனால் பேச்சு நடத்துவதன் மூலமே முன்னேற்றம் ஏற்படமுடியும். ஒரே இரவில் பிரச்சினைகளைத் தீர்த்துவிடமுடியாது.

வடக்கு - கிழக்கைப் பொறுத்தமட்டில் மக்களின் பிரச்சினைகள் உள்ளன; குழுக்களின் பிரச்சினைகள் ஒருபுறம்; தமிழ் - சிங்கள, தமிழ் - முஸ்லிம் உறவு நிலைகளில் உள்ள சீரற்ற நிலை என்று விடயங்கள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. ஒரு தீர்வைத் திருப்தி செய்ய முன்வைக்கும் ஆலோசனை அடுத்த தீர்வுக்கு அதிருப்தி தருவதாக உள்ளது. ஆகையால்தான் அவற்றை அவதானத்துடன் அணுக வேண்டி உள்ளது.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதிலும் சஷ்டங்கள் இருக்கின்றன. பல தரப்பாரும் பல விதமான கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்கள்.

சபாநாயகர்:
வடக்கு-கிழக்கு இணைப்பிலும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதனை நீங்கள் கூறவில்லை.

அமைச்சர் ஹமீத்;
வடக்கு - கிழக்கில் உள்ள சகல குழுவினரும் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறார்கள். புதிய யுத்தம் ஒன்றை எவரும் விரும்பவில்லை என்றே தெரிகிறது. நாம் எட்டும் தீர்வு நம்பிக்கை தருவதாக இருக்கவேண்டும் என்றே சகலரும் எதிர்பார்க்கிறார்கள்.

நான் புலிகளின் வாலை பிடித்திருப்பதாக எதிர்கட்சியினர் கூறுகின்றனர். புலிகள் எம்மை விழுங்கி விடவில்லை என்பதையிட்டு ஆச்சரியப்படுகின்றனர்.

புலிகள் என்னை விழுங்கினாலும் நான் கவலைப்படமாட்டேன். நான் இதனை ஒரு புனிதமான கடமையாகவே கருதுகிறேன்.

எதிர்க்கட்சி சிந்தனைப் போக்கும் நிலைப்பாடும் பேச்சு வார்த்தை தோல்வி அடையும்என்ற அடிப்படையிலேயே எழுந்ததால்தான் நான் புலிகளின் வாலைப் பிடித்திருப்பதாகக் கூறுகிறீர்கள். பேச்சின்மூலம் நடக்கப்போவதை சரித்திரம் பின்பு எடுத்துக்கூறும்.

சபாநாயகர்
நன்றி. வாழ்த்துக்கள்! கிழக்கில் முஸ்லீம்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள் அவை பற்றியும் பேசுங்கள்.
(அ-2)

## இலங்கைக்கு லிபியா உதவும்

கொழும்பு, மே 27
இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு லிபியா பெரிதும் உதவும் எனவும் லிபியத் தலைவர் கேணல் கடாபி மூலம் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் திரிபோலியில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ளஉலக இஸ்லாமிய சங்கம் அறிவித்துள்ளது.

ஏனைய முஸ்லிம் நாடுகளினதும் ஸ்தாபனங்களினதும் உதவிகளும் பெற்றுத் தரப்படும்.

பண்டார நாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒரு வார காலம் நடைபெற்ற உலக இஸ்லாமிய சங்கத்தின் மாநாடு வெள்ளிக்கிழமை முடிவடைந்தது.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரபு லீக் போன்ற அரேபிய நிதி வழங்கும் நிறுவனங்கள் உதவும் என்றும் இச்சங்கத்தின் இலங்கைப் பிரதிநிதி தகவல் தெரிவித்தார். (க)

## முதலாம் தர அதிபர்களாக 437 பேர் தெரிவாவர்

கொழும்பு, மே 27
முதலாம் தர, இரண்டாம் தர அதிபர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சையில் முதலாம்தர அதிபர்களாக 437 பேரும் இரண்டாம் தர அதிபர்களாக 1750 பேரும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மூன்றாம் தர அதிபர்களுக்கான நேர்முக தெரிவுத் திகதி பின்னர் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. மூன்றாம் தர அதிபர்களாக ஆயிரத்து 500 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதே வேளை-
கடந்த 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட முதலாம் தர தமிழ், முஸ்லிம் அதிபர்களுக்கான நேர்முகத் தெரிவு மீண்டும் எதிர் வரும் ஜூன் ஆறாம் திகதி நடைபெறும் என்று கல்விச் சேவை ஆணைக் குழுவின் உதவிச் செயலாளர் யு. அபேகுணசேகரா தெரிவித்தார்.

குறிப்பிட்ட தினங்களில் இடம்பெற்ற இத் தெரிவின் போது 12 பேர் சமுகமளிக்கவில்லை. [இ-எ]

## விமானப் பணிப்பெண் தெரிவு; இனவிகிதாசார அடிப்படையில்

கொழும்பு, மே 27
எயர்லங்கா நிறுவனத்திற்கு விமானப் பணிப்பெண்களும் பாதுகாப்பு அதிகாரிகளும் இனிமேல் இனவிகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

திட்டமிடல், அமுலாக்கல் துணை அமைச்சர் டாக்டர் விமல் விக்கிரமசிங்கா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்
(உ-எ)

## 3 தினங்களின் பின் சடலம் அடையாளம் காணப்பட்டது

குருநகர், மே 27
யாழ். பெரியாஸ்பத்திரி பிரேத அறையில் அடையாளம் காணப்படாத நிலையில் வைக்கப்பட்டிருந்த சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது

இறந்தவர் கொக்குவிலைச் சேர்ந்த தம்பித்துரை சுசீந்திரன் வயது 22.

கடந்த புதன்கிழமை இரவு காலஞ்சென்றவர் மருந்து வாங்குவதற்காக சைக்கிளில் வெளியே சென்றார். பின்பு விடுதிரும்பவில்லை. நேற்று யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் இவரது சடலத்தை பெற்றோர் அடையாளம் கண்டு எடுத்துச்சென்றனர்.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் வான் ஒன்றினால் மோதுண்டு அவர் இறந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

## குரங்குக் குட்டிகளில் "எய்ட்ஸ்" நோய் வைரஸ்

லண்டன் மே 25
''எய்ட்ஸ்'' நோயைப் பரப்பும் வைரஸ் கிருமிகள் சிம்பன்ஸி குரங்குக் குட்டிகள் இரண்டில் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டன.

இதன் மூலம் ''எய்ட்ஸ்'' நோய் வைரஸ் எப்படித் தோன்றியது என்பது பற்றிய ஆராய்ச்சியில் நிலவிய இடைவெளி நீக்கப்பட்டிருப்பதாக லண்டன் சஞ்சிகை 'நேச்சர்' தெரிவித்திருக்கிறது.

ஆபிரிக்க நாடான கபொனில் ''எய்ட்ஸ்'' வைரஸ் கிருமி பிடித்த சிம்பன்ஸி குட்டிகள் உள்ளன.
(இ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-05-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தமிழர் ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 27
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்ட ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 30 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும்

திரு சி. தார்சீசியாஸ்தலைமையில் வைபவம் நடைபெறும்.

யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)

## சுற்றுலா

யாழ்ப்பாணம், மே 27
பொலிகண்டி ஒக்ஸ்போர்ட் கல்வி நிறுவனம், சரவெட்டி ரலன்ற் இன்ஸ்ரிரியூட் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ மாணவிகள் நேற்று யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் கல்விச் சுற்றுலா மேற்கொண்டிருந்தனர்.

பொலிகண்டி ஒக்ஸ்போர்ட் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த 125 மாணவ மாணவிகளும் சரவெட்டி ரலன்ற் இன்ஸ்ரிரியூட்டைச் சேர்ந்த 215 மாணவ, மாணவிகளும் இதில் அடங்கிஇருந்தனர்.

இந்த இரு குழுவினரும் தமது கல்விச்சுற்றுலாவின்ஓர் அங்கமாக நேற்று உதயன் அலுவலகத்துக்கும் வந்திருந்தனர். (இ)

## வை.எம்.சி.ஏ.போன்ற இயக்கங்கள் அமைதிக்காகப் பாடுபட வேண்டும்

### பொதுக் கூட்டத்தில் கனடாத் தூதர் உரை

யாழ்ப்பாணம், மே 27
''உலகில் பொருளாதார, சமுதாயத் துறைகளில் பிரமாண்டமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் உலகில் உள்ள சகல மனிதரதும் அடிப்படைத் தேவைகளை நாம் இன்னும் பூர்த்தியாக்கவில்லை. மனிதரின் உள்ளார்ந்த சக்தியைப் பூரணமாகஎம்மால்வெளிக்கொணர முடியவில்லை

ஸ்ரீலங்காவிலுள்ளகனடாத் தூதர் மான்சி எம். ஸ்ரைல்ஸ் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற யாழ். வை எம். சி யின் நூற்றாண்டு நிறைவு விழாப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. எஸ். எம். வி திசநாயகம் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கனடாத் தூதர் நூற்றாண்டு நினைவுச் சுவர்ப் பட்டயத்தைத் திறந்துவைத்தார்.

கனடாத் தூதர் மேலும் பேசுகையில்,''துரதிருஷ்டவசமாக உலகில் வன்முறை, காழ்ப்புணர்ச்சி, அவா, அச்சம் ஆகியவற்றால் மோதல்களும் மனித உரிமை மீறல்களும் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. வை. எம். சி. ஏ. போன்ற இயக்கங்கள் அமைதிக்காகத் திட்டமிட்டுப் பாடுபடவேண்டும் என்றார்.

யாழ் வை. எம். சி. ஏயின் தலைவர் திரு சாம் எஸ். சதாசிவனின் பிரார்த்தனையுடன் ஆரம்பித்த கூட்டத்தில் திரு கிங்ஸ்லி சுந்தரலிங்கம் வேதாகமம் வாசித்தார்.

கூட்டத்தில் ஸ்ரீலங்கா வை. எம். சி. ஏக்களின் தேசிய கவுன்சிலின் திரு. எக்சித் பர்ணான்டோ, யாழ். ஆயரின் சார்பில் வண. பிதா பிரான்சிஸ் ஜோசப், தென் இந்திய திருச்சபையின் சார்பில் வண. கலாநிதி எஸ். ஜெபநேசன், மெதடிஸ்த சபையின் சார்பில் திரு. கே பி கோவிந்தராஜ், யாழ் வை. டபிள்யு சி. ஏயின் சார்பில் திருமதி ஆர். அரியரத்னம் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினார்கள். ''சேர்ச் ஒப் சிலோன்'' சார்பாகவும் ஆசியுரை நிகழ்த்தப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரெட்டும் ஆசியுரை நிகழ்த்தினார்.

சர்வதேச வை. எம். சி ஏக்களின் வாழ்த்துச் செய்திகளை திரு. அழகன் எஸ். கதிர்காமர் வாசித்தார்.

யாழ்ப்பாண வை.எம்.சி ஏயின் சாதனைகள்பற்றி அதன் பொதுச் செயலாளர் திரு. எம். தம்பித்துரை எடுத்துக் கூறினார்.

பொதுக்கூட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி வாத்தியக் குழுவின் இசையும் சுண்டுக்குளி பாடகர் குழுவின் கீதமிசைப்பும் இடம்பெற்றன.

யாழ். வை. எம். சி. ஏயின் துணைத் தலைவர் திரு. கே. என். வை. மொறிஸ் நன்றியுரை கூறினார். (எ)

## கச்சதீவில் கடற்படைத் தளம் அமைக்க இலங்கைநடவடிக்கை

### இந்தியச் செய்திகள் தகவல்

கச்சதீவில் இலங்கைக் கடற்படைத்தளம் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகி விட்டன என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன;

கடந்த சில தினங்களாக இலங்கைக் கடற்படையினர் கச்சதீவில் முகாமிட்டு இந்த வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். முட்புதர்கள், செடி- கொடிகளை அகற்றும் வேலைகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

1974 இல் பிரதமராக இருந்த திருமதி, இந்திரா காந்தி கச்சதீவை இலங்கைக்குப் கொடுத்தார்:

அந்த உடன் பாட்டின்படி கச்சதீவை இராணுவ நடவடிக்கைகளுக்கு இலங்கை பயன்படுத்தக் கூடாது என்று நிபந்தனை விதிக்கப் பட்டிருந்தது.

இது பற்றி அண்மையில் புதுடில்லி லோகசபையில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த துணை பாதுகாப்பு அமைச்சர் பேராசிரியர் ரஜா ராமண்ணா, ''இலங்கை அரசு கச்சதீவில் கடற்படைத்தளம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. ஆனால் வேலை தொடங்கவில்லை''- என்றும் குறிப்பிட்டார்,(எ)

## திறந்த பல்கலைக் கழகத்தின் மாணவர் மன்றத் தேர்தல்

### ஜூன் முதலாம் திகதி நடக்கும்

கொழும்பு, மே 27
இலங்கை திறந்தபல்கலைக் கழகத்தின் மாணவர் அமைப்புக்களுக்கான தேர்தல்கள் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஐந்தாம் திகதிவரை யாழ்ப்பாணம், கொழும்பு, மாத்தறை, கண்டி, அம்பாறை, அனுராதபுரம், கேகாலை ஆகிய இடங்களில் நடைபெறும்.

கொழும்பு, இரத்தினபுரி, சிலாபம், கழுத்துறை, மாத்தறை, காலி, அம்பலாங்கொட, கண்டி, பதுளை, அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அனுராதபுரம், பொலன்னறுவை, கேகாலை, குருநாகல் ஆகிய இடங்களிலும் வாக்களிப்பு நிலையங்கள் இருக்கும்.

திறந்த பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு மாணவர் சங்கம் இருக்கும். இத்தேர்தல்களில் போட்டியிடுவதற்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வது கடந்த ஏப்ரல்மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது.
(இ-எ)

ஆசிரியர் இடமாற்றங்கள்:

## மத்திய அரசிடம் பெற்றுவரும் உத்தரவை ஏற்க மாட்டோம்

### மாகாண செயலாளர் தகவல்

மட்டக்களப்பு, மே 26
வடக்கு- கிழக்கு மாகாணத்தில் எமது இடமாற்ற சபையினால் இடமாற்றங்கள் வழங்கப்படுகின்றன. இதற்கு முரணாக ஒருசில ஆசிரியர்கள் மத்திய அரசில் இருந்து இடமாற்றப்பணிப்புகளை— உத்தரவுகளை பெற்று வருகிறார்கள். அவற்றை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

அப்படியானால் மாகாண சபை இருந்து என்ன பயன்? மாகாண சபை சிறப்படைய வேண்டுமா? அல்லது தனிநபர் சிறப்படைய வேண்டுமா? என்பதை ஆசிரியர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக்கிளை வழங்கிய பாராட்டு விழாவுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராஜா இவ்வாறு கூறினார்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி மகளிர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பிரஸ்தாப இவ்விழாவுக்கு திரு. வி. த. குமாரசாமி தலைமை வகித்தார்.

திரு. சற்குணராஜா மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது-

[illegible] எந்த ஒரு நடவடிக்கையிலும் [illegible] பயன்படுத்த ஒருபோதும் நான் அனுமதிக்கமாட்டேன். எனது அமைச்சின் கீழ் உள்ள சகல அதிகாரங்களையும் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைத்து விட்டேன். அதிகாரங்களை நான் மட்டும் வைத்திருக்க விரும்பவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

இவ்விழாவில் மட்டக்களப்பு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. தியாகராஜா இலங்கைத்தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. கே. சோமசுந்தரம் உட்படப்பலர் உரையாற்றினார்கள். (அ-ரி)

புலிகள் மகளிர்.

பார்க்கப்படுகிறது.
[illegible] விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உப பிரிவாக மகளிர் முன்னணி இயங்கி வருவது தெரிந்ததே. (உ-9)

## மரண அறிவித்தல்கள்

### திரு. சடையர் பரமு

திரு. சடையர் பரமு 26 - 05 - 1990 இல் காலமானார். இவர் காமாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், ப. ஆனந்தவடிவேலு. ப. சண்முகநாதன் (சந்திரன்), ப. திருமூர்த்தி, ஆனந்தன் (ஜேர்மனி), ச. ஆனந்தலெச்சுமி, இ. சதானந்தலெச்சுமி, க. குகானந்தலெச்சுமி (ஆசிரியை, கண்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. இராசரத்தினம் (G S. பூநகரி), க. சண்முகம், ந. கணேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆ. யோகம்மா, ச.சுசிலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 27 - 5 - 90 ஞாயிற்றுக்கிழமை 2 00 மணியளவில் பூநகரி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இராசரத்தினம்
(G.S. பூநகரி)
மட்டுவில்நாடு,
பூநகரி.
(13157)

### முத்தன் செல்லர்

கெருடாவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்தன் செல்லர் 26- 05- 90 இல் காலமாகி விட்டார். இவர் மாணிக்கத்தின் அன்புக் கணவரும் முத்துலிங்கம், கனகராசா, [சுவிற்சலாந்து], பச்சைமுத்து, பராசக்தி, சிவனேஸ்வரி, ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிஸ்கந்தராசா. ஞானேஸ்வரி, [சுவிற்சலாந்து], சிறீஸ்வரன், சிறிகரன், மோகனா, உதயகுமார், சாந்தன், ஆகியோரின் பேரனும் யோகம்மா சிங்கராசா ஆகியோரின் மாமனாரும் ஆவார், அன்னாரின்பூதவுடல் இன்று (27-5- 90) ஞாயிறுமாலை 5 மணியளவில் காட்டுப்புலம் மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ. முத்துலிங்கம்
கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.
(3653)

### தம்பிப்பிள்ளை அன்னலிங்கம்

கோண்டாவிலைச் சேர்ந்தவரும், தற்போது திருநெல்வேலியில் வசித்தவருமாகிய தம்பிப்பிள்ளை அன்னலிங்கம் 26 - 5 - 90 இல் காலமானார்.

இவர் முன்னாள் ஐ. வி. சங்க முகாமையாளரும், தற்சமயம்றெட்பானாவில் கடமையாற்றியவருமாவார்

அன்னார் இராசம்மாவின் அன்பு மகனும், சுந்தரலிங்கம், பாலசிங்கம் துரைவீரசிங்கம், சரஸ்வதி, நல்லம்மா, தங்கரத்தினம் கனகபூசணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சேமாம்பிகையின் அன்புக் கணவரும், தயாளினி, தரிசியாவின் அன்புத் தந்தையும், சேய்மானந்தன், கணேசானந்தன், லிங்கேஸ்வரன்' பிரமானந்தனின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (27 - 5 - 90) ஞாயிறு பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சேமாம்பிகை.
றிசிஸ்ரார் லேன்,
திருநெல்வேலி.
(13158)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org